

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023


# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 104 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 07 – வியாழக்கிழமை 23 நவம்பர் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 104: Thiruvalluvar Year - 2054 - Karthigai 07 - Thursday 23 November 2023 - Trichy ★★ 16 Pages ₹5.00


# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (1)



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம் மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7ந் தேதி முதல் டிச.2ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதியுள்ளார். தற்போது சேலத்தில் 2023- டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தவிருக்கும் கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

## கலைஞர் கடிதம்

**உடன்பிறப்பே,**

நாமெல்லாம் சேர்ந்து வளர்த்திடும் கழகம், வலிவும் பொலிவும் கொண்டதாக; "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" எழில் கூடி ஏற்றமுடன், தளர்ச்சியின்றி வளர்ச்சியுற்று வாழ்க என்பார்களே; வயது முதிர்ந்தோர் வாயார மனமார! அது போன்ற வாழ்த்துக்களை ஒவ்வொரு நாளும் தமிழ் மக்களுக்கான சாதனைகளைச் செய்து இந்த அரசும் பெற்று வருகிறது. அரசினை நடத்தும் கழகமும் – அரசுக்குத் துணை நிற்கும் தோழமைக் கட்சிகளும் பெற்று வருவதை நாடறியும், நல்லோர் அறிவர் - வளம் பெருகுது! வயலிலே பயிர் தழைக்குது - என்றாலும்கூட, பெருகப் பெருகத்தான் - தழைக்கத் தழைக்கத்தான் – இன்னும் சற்று மேலும் பெருகிட, தழைத்திட வேண்டுமென்ற தணியாத ஆசை உரிமையுடைய உழவனுக்கு ஏற்படுகிறது! அதுபோல எனக்கு ஏற்படும் அவா மிகுதியின் அடையாளமாகவே இந்தக் கடிதம்!

**இளைஞர் அணியின் செயலாளராகவும் இருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின், அந்த அணியின் மாநில அமைப்பு, மாவட்ட அமைப்புகள், மற்றுமுள்ள அமைப்புகளை அணிவகுத்திடச் செய்து, ஆக்கபூர்வமானதொரு அருஞ் செயலை இளைஞர் அணி மாநில மாநாடு என்று, டிசம்பர் 15, 16 நாட்களில் நெல்லைச் சீமையில் நடத்திட தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெற்றுள்ளார். அதற்கான தொடக்கப் பணிகள் துவங்கிவிட்ட செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.**

**இளைஞர்கள் ஓர் இயக்கத்தின் நாடி நரம்புகளாகவும் - அரிய தியாகங்களைச் செய்து அனுபவம் பெற்ற அகவை முதிர்ந்தோர், அந்த இயக்கத்தின் இரத்த நாளங்களாகவும் - அமைந்து, அந்த இயக்கத்திற்கு அளிக்கும் உயிரோட்டமே, அந்த இயக்கத்தைக் கொள்கைக் குன்றமாகவும் - என்றும் வற்றாத ஜீவ நதி உருவாகிப் பெருகி வரும் உச்சி முகடாகவும் விளங்க வைக்கக் கூடியதாகும்.**

"கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்" என்றும் - அத்தகைய இளைஞர் கூட்டத்தைப் பார்த்து, "மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்!" என்று அறிவுறுத்தியும் நமது பாவேந்தர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், திருவாரூர் மாணவர், இளைஞர் மாநாட்டுக்கு 1942ஆம் ஆண்டு அறிவுரையும், அனல் கக்கும் வாழ்த்துரையும் அனுப்பி வைத்தாரே, அதற்குப் பிறகு அடிக்கடி இளைஞர்கள், மாணவர்கள் அணி வகுப்புகள், கூட்டங்கள், விழாக்கள், மாநாடுகள் நடைபெற்றிருந்தாலுங் கூட, அனைத்துமே மொழிப்போர் வெற்றியைக் கொண்டாடி முடித்து விட்டன - அஃதன்னியில், முழுப் போர் ஒன்று தமிழ்ச் சமுதாயத்துக்குத் தேவைப்படுவதை எண்ணிப் பார்த்து, சமுதாயத் துறையில், அரசியல் துறையில், பொருளாதாரத் துறையில் என எல்லாத் துறைகளிலும் எழுப்பிடும் போர்க்குரல், வெற்றி முரசாக ஒலித்திட, "எழுக இளைஞனே!" என்று அறவழி அழைப்பு விடுத்திடவே நெல்லையில் மாநில இளைஞர் அணி மாநாடு!





சேலத்தில் டிசம்பர் 17-ல் நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டையொட்டி கன்னியாகுமரியில் மாபெரும் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்று துவக்கி வைத்தார். (15.11.2023)

இளைஞனாக என் போன்றோர் இருந்தபோது தான் "நெருப்பின் பொறிகளே நீங்கள்தான் தேவை!" என்று ஈரோட்டுக் குரலும்– காஞ்சியின் முழக்கமும் கேட்டது, எங்களை நோக்கி! – அன்று கிளம்பிய இளைஞர் பட்டாளத்தின் ஒரு துளிதான் நீங்கள் தலைவன் என்று ஏற்றிப் போற்றுகின்ற இந்தக் கருணாநிதி! இந்த உண்மையை நான் ஒருக்கணமும் மறந்து விட மாட்டேன் – மறந்தோர் சிலர், பொது வாழ்விலேயே மதிப்பற்று, "புழுக்கை"களாக ஆகிவிட்ட காட்சியைக் கண்டுகொண்டுதானே இருக்கிறோம்.

அதனால், இன்றைக்கு ஒன்று - நாளைக்கு ஒன்று என இலட்சியங்களை மாற்றி மாற்றி அமைத்துக் கொண்டு, அதற்கேற்ப தனது பேச்சாற்றலைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள், "இலட்சியம்" என்ற சொல்லை அறிந்தவர்களே தவிர, இலட்சியம் என்றால் என்ன என்பதை உணர்ந்து கொண்டோரல்லர்! உணர்ந்தால்தானே அதன்படி நடக்கிறோமா? நடக்கவில்லையா? என்பதைப் பகுத்தறிந்து அதற்கேற்ப நமது வாழ்வை வகுத்துக் கொள்ள முடியும்.

**நாம் யார்? - நமது இனம் யாது? நமது மொழி எது? மொழிக்காக இழப்புகள் பலவற்றை ஏற்றவர்கள், உயிரையே விட்டவர்கள், மொழியைக் காத்திடும் போருக்கு இளைஞர்களை, மாணவர்களை, மக்களைத் தயாரித்தவர்கள், அதற்காகக் கடும் அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்டவர்கள் - அவர்களைப் பற்றியெல்லாம் நினைத்துப் புகழ்ந்துரைத்தால் மட்டும் போதுமா? நாமும் அவர்களைப் போல தியாகச் சிந்தை - உறுதி உள்ளம் பெற வேண்டாமா?**

**உடன்பிறப்பே, நான் முதன் முதலாகப் பொது வாழ்வில் எப்படி அடியெடுத்து வைத்தேன் என்பதைத் தெரிந்து கொள்வதே; இளைஞர்களுக்கும் - மூத்தவர்களுக்கும் -தேவையானதும் - இன்றியமையாததுமான ஒன்றாகும் - இதற்குப் பொருள் "நான் காட்டிய வழியில் செல்" என்பதல்ல! காட்டப்பட்ட கடுமையான தியாகிகளின் வழிகளை நான் பின்பற்றியது போல, உன் போன்ற இளைஞர்களும், மாணவர்களும் பின்பற்ற வேண்டுமென்பது தான் என் விருப்பம்.**

நெல்லை மாநாடு தொடங்கும் வரையில் நிறைய எழுதப் போகிறேன் – இது முதல் கடிதம்தான் – இளைஞர்களே கூடி மாநாடு நடத்தினால்தான் எனக்கு மகிழ்ச்சி! ஏற்புடையதுமாகும்! மூத்தோர் ஆதரவாளர்களாக விளங்கட்டும்.

மாநாடு தொடக்கத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஏடுகளில் கண்டேன் – இளைஞர்கள் பெரும்பாலும் இருப்பதற்கு மாறாக, அகவை முதிர்ந்த அமைச்சர்களே அந்தப் புகைப் படத்தை அடைத்துக் கொண்டு நிற்கின்ற காட்சி, சிறிது ஏமாற்றத்தை எனக்குத் தராமல் இல்லை!



இளைஞர்கள், மூத்தோர்களாக ஆகாமல் இருக்க முடியாது – ஆக வேண்டும் – அதே சமயம், இளைஞர்களுக்கு வழி விடாமல் அந்த மூத்தோர் அடைத்துக் கொள்ளவும் கூடாது.

அவரவர்க்குரிய பணிகளை - அவரவர்கள் பகிர்ந்து கொண்டு ஆற்றிட வேண்டும்.

அதனால்தான் இளைஞர்களுக்கு வழி விடுவோம் என்ற தலைப்பில், இந்தத் தொடர் கடிதத்தைத் தொடங்குகிறேன்.

அன்புள்ள

மு.க.

(முரசொலி - 7.11.2007)

## கல்வி சிறப்பாக வளர்ச்சியடைய அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும்

# முதலமைச்சர்களே வேந்தர்களாக இருக்க வேண்டும்!

### தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ.23-**

**"கல்வி சிறப்பாக வளர்ச்சியடைய அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் முதலமைச்சர்களே வேந்தர்களாக இருக்க வேண்டும்" என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

முதலமைச்சரும், பல்கலைக்கழக வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய விழாப் பேருரை வருமாறு:–

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, உங்கள் எல்லோருக்கும் பட்டங்கள் வழங்குவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்! பெருமைப்படுகிறேன்!

**இசைக்கும், என் குடும்பத்துக்கும் நெருக்கமான உறவு உண்டு!**

இசைக்கும், என் குடும்பத்துக்கும் நெருக்கமான உறவு உண்டு! என்னுடைய தாத்தா முத்துவேலர் பாட்டு எழுதுவதில் மட்டுமல்ல, பாட்டு பாடுவதிலும் வல்லவர். அதேபோலதான், தலைவர் கலைஞர் அவர்களும் கவிதைகள் மட்டுமல்ல, நிறைய சினிமா பாடல்களை கூட எழுதி இருக்கிறார். அவர் பாட்டு பாடுவது இல்லையே தவிர, அனைத்து இசை நுணுக்கங்களும் அவருக்கு நன்றாக தெரியும். இசையை கேட்டவுடனே, அதில் சரி எது, தவறு எது என்று சொல்லிவிடுவார். அந்தளவுக்கு வல்லமை பெற்றிருந்தார்.

அடுத்து, 'விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே' உள்ளிட்ட பாடல்களை பாடியது என்னுடைய மாமா 'தமிழிசைச் சித்தர்' சிதம்பரம் ஜெயராமன் அவர்கள். அந்த வகையில் எனக்கு இசையோடு நெருங்கிய உறவு இருக்கிறது.


தொடர்ச்சி 4ஆம் பக்கம்




முதலமைச்சரும், பல்கலைக்கழக வேந்தருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழாவில், மதிப்புறு முனைவர் பட்டத்தை திரையிசை பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கு வழங்கினார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 23-11-2023

## ஆளுநர் பதவியே அகற்றப்பட வேண்டியதே - 2

மூத்த வழக்கறிஞர் ராஜீவ் தவான் எழுதும் போது...

**"ஆளுநர்கள் நியமனத்தில் புதிய நடைமுறையை கண்டுபிடித்தாக வேண்டும். ஆளுநராக நியமிக்கப்பட உள்ளவர்களை நாடாளுமன்ற மாநிலங்களவைக்கு வரவழைத்து அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் முழுமையாக விசாரிக்க வேண்டும். அவர்களது பொருத்தப்பாடும், தகுதியின்மையும் அம்பலப்படுத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தில் இதற்கான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.**

பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் அவர் வரிசைப்படுத்தினார்.

* மேகாலயா ஆளுநராக இருந்த வி.சண்முகநாதன் மீது பாலியல் குற்றச்சாட்டை பத்திரிகைகள் விரிவாக எழுதின.

*அருணாச்சலப் பிரதேச ஆளுநர் ஜோதி பிரகாஷ் சட்டமன்றத்திற்கு ஒரு தலைப்பட்சமான தகவலை அளித்து ஜனவரி 23, 2016 இல் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தினார். பின்னர் பா.ஜ.க. ஒன்றிய அரசின் அரசியல் நோக்கம் நிறைவேறியதும் குடியரசுத் தலைவர் ஆட்சி வசதியாக திரும்பப் பெறப்பட்டது. அருணாச்சலப் பிரதேச முதல்வர் கலிக்கோ புல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவர் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனார்.

* உத்தரகண்ட் ஆளுநர் கே.கே.பால் உதவியால் முதல்வர் ராவத் மீது சி.பி.ஐ. விசாரணை ஏவப்பட்டு அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. இதை விசாரித்த நீதிபதி கே.எம்.ஜோசப் ஆட்சி தலைமையிலான அமர்வு உத்தரகண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்டது பா.ஜ.க.வுக்கு சாதகமானது, அரசமைப்புச்சட்டத்திற்குப்புறம்பானதுஎனத்தீர்மானித்தார். கடும் உழைப்புடன் கூடிய கவனமிக்க தீர்ப்பை வழங்கக் கூடிய அறிவார்ந்த நீதிபதியான கே.எம்.ஜோசப் இதற்காக பழிவாங்கப்பட்டார். உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கு தகுதியான அவரது பெயர் பரிந்துரை செய்யப்படாமல் கைவிடப்பட்டது.

* 2017இல் கோவா, மணிப்பூர் சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றாலும் பா.ஜ.க. ஆட்சியை கைப்பற்றுவதற்கு ஆளுநர்கள் உதவி செய்தனர்.

* 2020இல் மத்தியப் பிரதேசம், 2022 இல் மகாராஷ்டிரம் என ஆளுநர்கள் உதவியுடன், அதிகார பலத்துடன் பா.ஜ.க. ஆட்சியை கைப்பற்றியது. தேர்தல்கள்தான் இந்தியாவின் பலமாகும். வாக்காளர்களின் மனநிலை. உணர்வு தேர்தலில் வெளிப்படுகிறது. ஆனால் ஆளுநர்களின் செயல்பாட்டால் தேர்தலின் நோக்கமே அடிபட்டுப் போகிறது.

* சில ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டக் கொள்கைகளை மீறி குற்றம் புரிகின்றனர். தொங்கு சட்டமன்றத்தில் முதல்வரை நியமனம் செய்வது முக்கியமான பிரச்சினையாகும். அவர்களுக்கு ஜனநாயக அடிப்படைகள், மக்களின் தீர்ப்பு பற்றி எல்லாம் அக்கறையில்லை. ஏறத்தாழ அனைத்து ஆளுநர்களுமே பதற்றும், மிகை உணர்ச்சி கொண்டவர்களாகவும், அரசியல் சார்புடன் செயல்படுபவர்களாகவும் இருக்கின்றனர்.

* கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், மேற்குவங்க ஆளுநராக இருந்த ஜெகதீப் தன்கர் போன்றவர்கள் தங்களது சொந்த அரசுகளுக்கே சவால் விடும் வகையில் செயல்பட்டனர். ஜெகதீப் தன்கர், தலைமைச் செயலாளரையும், காவல்துறை தலைவரையும் ஆளுநர் மாளிகைக்கு கட்டளையிட்டு வரவழைத்தார்.

* பல்கலைக் கழக வேந்தர் நியமனம் குறித்த சட்டத்தை திருத்தம் செய்ய கேரள மாநில அரசு விரும்பும் போது ஆளுநர் ஆரிப், பல்வேறு பல்கலைக் கழக வேந்தர்களை பதவி நீக்கம் செய்கிறார். இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகளை ஆளுநர்கள் உருவாக்கினார்கள். உருவாக்கிக் கொண்டும் வருகிறார்கள்.

**ஆளுநர்களின் நடத்தைகள் குறித்து உச்சநீதிமன்றம் பலமுறை கொட்டியும் இருக்கிறது. குட்டியும் இருக்கிறது. திட்டியும் இருக்கிறது. ஆனால் இவர்கள் திருந்துவதாக இல்லை.**

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் விடுதலையில் மாநில அமைச்சரவை எடுத்த முடிவை ஏற்காமல் ஆளுநர் காலதாமதம் செய்ததை உச்சநீதிமன்றம் கண்டித்து அவர்களை நீதிமன்றமே விடுதலை செய்ததைப் பார்த்தோம். உச்சநீதிமன்ற நீதிபதிகள் எல்.நாகேஸ்வரராவ், பி.ஆர். கவாய், ஏ.எஸ்.போண்ணா ஆகியோர் அடங்கிய அமர்வு ஒரே தீர்ப்பை வழங்கியது.

The reference of the recommendation of the Tamil Nadu Cabinet by the Governor to the President of India two and a half years after such recommendation had been made is without any constitutional backing and is inimical to the scheme of our Constitution, whereby "the Governor is but a shorthand expression for the State Government' as observed by this Court'.

**"கவர்னர் என்பது மாநில அரசின் சுருக்கெழுத்து மட்டுமே"** என்று முன்பொரு தீர்ப்பில் உச்சநீதிமன்றம் சொன்னதையே பேரறிவாளன் வழக்கிலும் நீதிபதிகள் கூறினார்கள்.

பஞ்சாப் சட்டமன்ற நிதிநிலை அறிக்கைக்கான கூட்டத் தொடரை கூட்டுவதற்கு அனுமதி தரவில்லை அந்த மாநில ஆளுநரான பன்வாரிலால். கடந்த பிப்ரவரி மாதம் உச்சநீதிமன்றத்துக்கே போனது பஞ்சாப் மாநில அரசு. **"ஆளுநர் என்பவர் மாநில அமைச்சரவைக்கு கட்டுப்பட்டவர். இது உச்சநீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகளில் தீர்ப்பாகத் தரப்பட்டுள்ளது. எனவே அமைச்சரவைக் கூழு ஒரு முடிவெடுத்தால் ஆளுநர் அதனை ஏற்க வேண்டும்"** என்று நீதிபதிகள் அறிவுறுத்தினார்கள்.

தமிழ்நாடு – கேரளா – மேற்கு வங்கம் பஞ்சாப் – டெல்லி தெலுங்கானா என எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்துக்கு குடைச்சல் கொடுக்கும் வேலையை மட்டுமே ஆளுநர்கள் பார்த்து வருகிறார்கள். தமிழ்நாடு – கேரளா – பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் உச்சநீதிமன்றத்திலே முழுமையான வழக்கை பதிவு செய்துள்ளது.

**"நீங்கள் நெருப்புடன் விளையாடுகிறீர்கள்"** என்று பஞ்சாப் மாநில ஆளுநரைப் பார்த்து உச்சநீதிமன்றம் எழுப்பிய கேள்வி என்பது சாதாரணமானது அல்ல. நெருப்புடன் என்றால் மக்களோடு சிறுபிள்ளைத்தனமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் ஆளுநர்கள். ஒவ்வொரு முறையும் உச்சநீதிமன்றத்துக்குப் போய் இவர்களைக் கட்டுப்படுத்துங்கள் என்று நிற்க முடியுமா? முடியாது. இதற்கு மொத்தமாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

**'ஆளுநர் பதவியே அகற்றப்பட வேண்டும்'** என்று தமிழ்நாடு முதலமைச்சர் வைக்கும் கோரிக்கையானது இந்தியாவின் கோரிக்கையாக மாற்றப்பட வேண்டும். மாநிலங்களைக் காக்க – மக்களாட்சித் தத்துவத்தைக் காக்க ஆளுநர் பதவி அகற்றப்பட வேண்டும்.

**"ஆட்டுக்குத் தாடி எதற்கு? நாட்டுக்கு ஆளுநர்கள் எதற்கு?"** பேரறிஞர் அண்ணா!

●●

### ஓமன் நாட்டில் கடத்திச் செல்லப்பட்ட

# தமிழ்நாடு மீனவரை மீட்க நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, நவ. 23 - ஓமன் நாட்டில் கடத்திச் செல்லப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பெத்தாலிஸ் அவர்களை மீட்டு தாயகம் கொண்டுவர உரிய தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

ஓமன் நாட்டில் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர் பெத்தாலிஸ் என்பவரை மீட்டுக் கொண்டுவர தூதரகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (21.11.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், ஓமன் நாட்டின் துக்ம் துறைமுகத்தில் உள்ள NOOH 1012 மற்றும் YAYA 1184, அல்ரெடா (ஓமானியன்) ஆகிய மீன்பிடிப் படகுகளில் வேலை செய்து வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 பேர் கொண்ட குழுவில், பெத்தாலிஸ் என்பவரும் பணிபுரிந்து வந்ததாகவும், அந்த மீன்பிடிப் படகுகளில் பணிபுரிந்து வந்த 18 மீனவர்களின் சம்பளத்தை உரிமையாளர் தராததால் உரிமையாளருக்கும், மீனவர்களுக்கும் இடையே பிரச்சினை நிலவி வந்த நிலையில், பெத்தாலிஸ் அவர்களை அடையாளம் தெரியாத சிலர் கடத்திச் சென்றுள்ளதாகவும், அவரை உடனடியாகக் கண்டுபிடித்து, இந்தியாவுக்கு திருப்பி கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெத்தாலிஸ் அவர்களது மனைவி திருமதி ஷோபா ராணி அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஓமன் நாட்டிலுள்ள, இந்தியத் தூதரகம் மூலம் பெத்தாலிஸ் அவர்களை மீட்டு தாயகம் கொண்டுவர உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில்

# பா.ஜ.க.வின் செயல் அதிருப்தியை ஏற்படுத்துவதாக உச்சநீதிமன்றம் கருத்து!

## தேர்தலில் மோடி அரசுக்கு முடிவு கட்டுங்கள்! கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.23- உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம், நீதிபதிகள் இடமாற்றம் முதலியவற்றில் ஒன்றிய பி.ஜே.பி. அரசு விருப்பு வெறுப்பு அடிப்படையில் செயல்படுகிறது என்று உச்சநீதிமன்றமே பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளது. ஒன்றிய அரசு தான்தோன்றித்தனமாக நடப்பதைச் சுட்டிக்காட்டி, வரும் 2024 மக்களவைத் தேர்தலில் பி.ஜே.பி. ஆட்சிக்கு முடிவு கட்டுவதுதான் இதற்கு ஒரே பரிகாரம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நாடு 'சுதந்திரம்' அடைந்து, நமது அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 73 ஆண்டுகள் ஆகும் நிலையில், இதற்குமுன் எப்போதும் இல்லாத வகையில், நம் நாட்டின் உச்சநீதிமன்றத்திற்கும், உயர்நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளைப் பரிந்துரைக்கும் "கொலிஜியம்" (Collegium) என்ற மூத்த நீதிபதிகள் அமைப்பில் (5 பேர் அதில் உள்ளவர்கள்) இரண்டாவதுதான் மூத்த நீதிபதி ஜஸ்டிஸ் சஞ்சய் கிஷன் கவுல் அவர்கள். (இவர் வருகிற டிசம்பர் 24, 2023 இல் ஓய்வு பெறவிருக்கிறார்). திங்களன்று உச்சநீதிமன்றத்தில், ஒன்றியத்தில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் ஆர்.எஸ்.எஸ். ஆட்சியான பா.ஜ.க. ஆட்சியில் நீதியும், நீதித்துறையும் என்ன பாடுபடுகிறது என்பதைப் பகிரங்கமாகவே வேதனையோடு வெளிப்படுத்தியுள்ளார்.

**உயர்நீதிமன்றங்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனம், இடமாற்றங்களில் ஒன்றிய அரசின் அத்துமீறல்!**

உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றங்களுக்கு 'கொலிஜியம்' நீதிபதிகளை நியமிக்கச் செய்யப்படும் நீதிபதிகள் பட்டியலில் உள்ள பெயர்களில் சிலவற்றை மாத்திரம் "Pick and Choose" என்ற முறையில் அது நியமனங்களானாலும் அல்லது மற்ற மாநில உயர்நீதிமன்றங்களுக்கு மாற்றல்கள் (Transfers) ஆனாலும் செய்வது, மூத்தவர்களை விட்டுவிட்டு, குறிப்பிட்ட சில பெயர்களை மட்டும் நியமனம் செய்வது என்பது நீதி பரிபாலனக் கட்டமைப்பையும், அனுபவமும், பணி மூப்பும் உடைய சிறந்தவர்கள் நீதிபதிகளாகும் வாய்ப்பை மறுப்பதாகவும் அமைந்துவிடுகிறது!

நீதிபதிகள் நியமனம் சம்பந்தமான "The Second Judges Case" தீர்ப்பின்படி, 'கொலிஜியம்' பரிந்துரைத்ததை ஏற்க வேண்டியது நிர்வாகத்தின் கடமை. அதற்கு மாறாக நடப்பது ஏற்கத்தக்கதல்ல; நீதிபதிகளை இப்படி குறிப்பிட்டு சிலரை பட்டியலில் விடுவது, கீழே இருக்கிறவர்களை நியமிப்பது என்பது நியாயமானதல்ல என்று வெகுமனக் கசப்புடன் சுட்டிக்காட்டியுள்ளது உச்சநீதிமன்றம்.

நிர்வாகத் துறையை நீதித் துறையின் உச்சம் இதற்கு முன்னால் இப்படி பகிரங்கமாய் விமர்சித்து "கண்டித்து" என்ற சொல்லைத் தவிர்த்துவிட்டு கூறிய நிலை உண்டா?

கவுகாத்தி உயர்நீதிமன்றத்தில் நடந்தது என்ன?



கடந்த 9 ஆண்டுகளாகத்தான் இப்படிப்பட்ட விரும்பத்தகாத நிலை தொடர்ந்து ஏற்படும் அவலம் நீடித்து வருகிறது!

சில வாரங்களுக்கு முன்பு மூன்று மாநில உயர்நீதிமன்ற மூத்த நீதிபதிகள் நியமனம், மாறுதல் எல்லாம் 'கொலிஜியம்' பரிந்துரை செய்தபோது, கிடப்பில் போட்டு, பிறகு மூத்த நீதிபதி கொலிஜியம் பரிந்துரை என்னவாயிற்று என்று அட்டர்னி ஜெனரலிடம் கேட்டது ஏடுகளில் செய்தியானது அரசுக்கோ, நீதிபரிபாலனத்திற்கோ பெருமை அளிக்கக் கூடியதா?

பிறகு அந்த மூன்று நீதிபதிகள் குறிப்பிடப்பட்ட மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களுக்குத் தலைமை நீதிபதிகளாகப் பதவியேற்றனர்.

அடுத்து சில நாள்களுக்கு 'கொலிஜியம்' பரிந்துரைத்திராத பின்னால் இருந்த ஒருவரை நியமனம் தந்து, அவர் பதவியேற்க கவுகாத்தி உயர்நீதிமன்றத்திற்குச் சென்ற நிலையில், பதவியேற்க அவரை அங்கே இருந்த நீதிமன்றம் அனுமதிக்காமல் தடுத்து நிறுத்திவிட்டது!

காரணம், அவரைவிட மூத்தவரும், அனுபவம் வாய்ந்தவருமான மற்றொரு நீதிபதியின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், நியமனம் முன்பே நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. அவர் பெயர் வழக்குரைஞர் என். உன்னிக்கிருஷ்ணன் (கேரளாவைச் சேர்ந்தவர்). அக்டோபரில் இவர் பெயரை கொலிஜியம் பரிந்துரைத்ததும் கிடப்பில் போடப்பட்டதால் ஒரு சங்கடமான (Embarrassing Outcomes) நிலை ஏற்பட்டது.

**மோடி ஆட்சியில் செங்கோல் வளைந்தது!**

இதை மூத்த நீதிபதி பளிச்சென்று அனைவருக்கும் புரியும்படி கூறியுள்ளதானது, பா.ஜ.க.வின் மோடி ஆட்சியின் செங்கோல் எப்படி வளைந்த செங்கோலாகி ஆட்சி நடைபெறுகிறது என்பதைக் காட்டுகிறது!

*The Court had said the Government's pickand choose policy both in appointment and transfers of Judges was a matter of "great concern."*

இதன் தமிழாக்கம்:

"நீதிபதிகளின் நியமனத்திலும், பணியிட மாறுதலிலும், ஒன்றிய அரசு பொறுக்கியெடுத்து விருப்பத்திற்கேற்ப கடைப்பிடித்துவரும் நடைமுறைப்படுத்தி வரும் போக்கு பெரிதும் கவலைக்குரியதாக உள்ளது" என உச்சநீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் அண்மைக்கால இப்படிப்பட்ட கேள்விகள் இந்திய ஜனநாயகத்தை எந்த அளவுக்கு உலகம் மதிக்கும் நிலையை ஏற்படுத்தும்.

**2024 மக்களவைத் தேர்தல்தான் பாடம் கற்பிக்கும்!**

அரசமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள நீதித் துறையின் முழு சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறதா? அல்லது பறிக்கப்படுகிறதா? என்ற கேள்வியை தான் நாளும் ஏற்படுத்தி வருகிறது! இந்நிலைக்கு சரியான ஒரே பதில், மக்கள் வரவிருக்கும் 2024 பொதுத் தேர்தல்தான். ஜனநாயகமும், இந்திய அரசமைப்புச் சட்டமும் அவற்றிற்குரிய தனிப் பெருமைகளைப் பெற முடியும் மக்கள்தான் அதிகாரம் படைத்த மன்னர்கள், ஜனநாயகத்தில்!

இவ்வாறு கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



## ‘நெஞ்சுக்கு நீதி’ நூலை வாசியுங்கள்!

# கலைஞர் எத்தனை பெரிய இதழாளர் என்பது புரியும்!

### கோவை - கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கில் கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!

சென்னை, நவ.23-

“4168 பக்கங்கள் கொண்ட சுயசரிதை நூலான கலைஞரின் ‘நெஞ்சுக்கு நீதி’ நூலைப் படியுங்கள். கலைஞர் எத்தனை பெரிய இதழாளர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்” என கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், கோவையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா - ‘இதழாளர் - கலைஞர்’ கருத்தரங்கில் தலைமையேற்று உரையாற்றுகையில் புகழாரம் சூட்டினார்.



கோவையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - ‘இதழாளர் - கலைஞர்’ கருத்தரங்கம் அமைச்சர் சு.முத்துசாமி, கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், செஞ்சிமஸ்தான், த.மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கவிப்பேரரசு வைரமுத்து பேசியதாவது :

ஒரு மனிதருக்குள் இத்தனை பரிணாமங்களா என்று கலைஞர் அவர்களை கண்டு வியந்து போயிருக்கிறேன். அவரின் அனைத்து பன்முகத் தன்மைக்கும் முன்னர் அவர் முதன்முதலாக, தன்னை ஒரு பத்திரிகையாளனாக உலகுக்கு அறிவித்தவர். மாணவ நேசன், முரசொலி ஆகிய கையெழுத்து பிரதிகளை எழுதியவர். அந்த காலகட்டத்தில் மரப்பாலங்களை கடந்து ஏடுகளை எடுத்து செல்ல ஆட்களுக்கு கூலி கொடுக்க இயலாத காரணத்தால் ஏடுகளை தன்தோளில் சுமந்து கொண்டு மரப்பாலங்களை கடந்தவர். கலைஞர் அவர்களுக்கு “நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கு அவருடைய மாணவன் என்ற வகையில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

#### எழுதுவது அவ்வளவு சுலபம் கிடையாது!

எழுத்து வழியாகவும், பேச்சு வழியாகவும், தொழில் நுட்ப வழியாகவும் தமிழை அடுத்த தலைமுறை கொண்டு சேர்க்க வேண்டும் என்றால், தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவை, கலைஞர் அவர்களையும், தொழில் நுட்பம் வாயிலாக அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லுங்கள். எழுதுவது அவ்வளவு சுலபம் கிடையாது. கலைஞர் அவர்களிடம் “எழுத்து வேலைகளைக் குறைத்துகொண்டு ஓய்வெடுக்கலாம் அல்லவா” என்று நான் கூறியபோது, “நான் எழுதுவதே ஓய்வெடுக்கத்தான், எழுத்துதான் எனக்கு ஓய்வு, எழுத்துதான் எனக்கு மருந்து,” என கலைஞர் அவர்கள் கூறினார்,

தொழில்முறை எழுத்தாளர் என்பவர் யாராவது சொல்வதற்காகவும், ஊதியத்திற்காகவும் எழுதுவார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் லட்சியத்திற்காக எழுதியவர். என் தமிழ் ஆசான் கலைஞர் அவர்களின் பெருமையைப் பரப்பவேண்டு மென்றால் அந்த விழாக்கள் நடைபெறும் இடங்களின் இருபக்கங்களிலும் கலைஞர் அவர்களின் மேற்கோள் வரிகளை இடம்பெறச் செய்யுங்கள் என கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் அவர்களின் வசனத்திலேயே கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

திருவள்ளுவருக்குச் சொல்லால் உரை எழுதிவிட்டார். கட்டடத்தால் ஒரு கலைக் கூடம் கட்டினார். திருவாரூர் தேரை வள்ளுவர் கோட்டத்தில் கட்டினார். தமிழ்நாட்டின் தென்எல்லையான கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவருக்கு சிலையை எழுப்பினார். வடக்கே வள்ளுவர் கோட்டம், தெற்கே திருவள்ளுவர் சிலை என திருவள்ளுவனுக்கு இடையில் எங்கள் தமிழ்நாடு இருக்கிறது என்று சொல்லி விட்டுச் சென்ற ஞானி எங்கள் கலைஞர் அவர்கள்.

#### காலை உணவுத் திட்டத்தின் ரசிகன்!

தென்னாட்டில் சமூகநீதி வெற்றிபெற்றது. வடநாட்டில் சமூகநீதி தோற்றது. ஏனென்றால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் ரசிகன் நான். இத்திட்டத்தின் பயனாக மாணவன் வயிறார சாப்பிடுகிறான். அதனால் ஆசிரியர் சொல்லிக்கொடுக்கும் பாடம் மாணவனுக்குப் புரிகிறது. குழந்தை உணவை பள்ளியில் சாப்பிடுவதால் தாய்மார்களின் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அத்துடன் அவர்களின் காலை நேர வேலைப்பளுவும் குறைந்துள்ளது. நம் தமிழ் நாட்டில் பள்ளிகளில் வழங்கப்படும் சத்துணவின் மூலம் அனைத்து தரப்பு மக்களும் ஒரே வரிசையில் அமர்ந்து சாப்பிடுகிறார்கள். ஆனால் வடநாட்டில் சத்துணவை பரிமாறும்போது மேட்டுக்குடி மாணவர்கள் ஒரு வரிசையிலும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒரு வரிசையிலும் அமர்த்தப்படுகின்றனர். மேலும், தாழ்த்தப்பட்ட தாய்மார்களால் சமைக்கப்பட்ட உணவை சாப்பிட மேட்டுக்குடி மாணவர்கள் மறுக்கிறார்கள்.

#### எத்தனை பெரிய இதழாளர்!

இங்கு சமூக நீதி வெற்றி பெற்றது தமிழ்நாடா? வட நாடா?.

இதையெல்லாம் பார்க்கும்பொழுது சமூக நீதியில் நம் தமிழ்நாடே வென்றுள்ளது. 4168 பக்கங்கள் சுயசரிதை புத்தகத்தை எழுதியவர் கலைஞர் அவர்கள். ‘நெஞ்சு நீதி’ நூலை வாசியுங்கள். கலைஞர் அவர்கள் எத்தனை பெரிய இதழாளர் என்பதை புரிந்து கொள்ளமுடியும். என் ஆசான் கலைஞர் அவர்களின் புகழ் வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் பேசினார்.

---

### அமைச்சர் கே.என்.நேரு வரவேற்புரை! அமைச்சர் துரைமுருகன்-டி.ஆர்.பாலு எம்.பி.- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - கனிமொழி கருணாநிதி எம்.பி.- அமைச்சர் எ.வ.வேலு முன்னிலை!

# திருமங்கலம் கோபால் புதல்வர் கோ.இராஜ்குமார் -சா.சஜீ மணவிழா!

### தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 23 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாதுகாப்பாளர் - சென்னை, மைலாப்பூர், சி.ஐ.டி. காலனி நினைவில் வாழும் திருமங்கலம் கோபால்-பு.சரோஜினி ஆகியோரின் புதல்வர் கோ. இராஜ் குமாருக்கும், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், மகாதேவபுரம், நாடார் காலனி, அ.சாகுல் அமீது-மு.வகிலா பானு ஆகியோரின் புதல்வி சா.சஜீக்கும் மணவிழா நாளை (24.11.2023-வெள்ளிக்கிழமை) காலை 9.15 மணியளவில் தேனாம்பேட்டை, அண்ணா சாலையில் அமைந்துள்ள காமராஜர் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றார்.

இம்மணவிழாவில் அமைச்சர் கே.என். நேரு வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் ஆன்றோரும் சான்றோரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

---

### அனைத்துத் தரப்பு மக்களும்

# பயன்பெறும் வகையில் கூட்டுறவுத் துறை செயல்படுகிறது!

### நலஉதவிகளை வழங்கி அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

சேலம், நவ.23-

சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாய கூடத்தில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் 3,024 பயனாளிகளுக்கு ரூ.33.99 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.என். நேரு வழங்கினார்.

விவசாயிகள், சிறு வியாபாரிகள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் பயனடையும் துறையாக கூட்டுறவுத் துறை விளங்குகிறது என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு குறிப்பிட்டுள்ளார்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக்கூடத்தில் (20.11.2023) நடைபெற்றது.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் 1996-ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்றிருந்தபோது விவசாயிகள் வாங்கிய கடனை முழுமையாக இரத்து செய்வோம் என்று ரூ.7,500 கோடியை முழுமையாக இரத்து செய்தார்கள். 1996 முதல் 2001 காலகட்டத்தில் விவசாயிகளுக்கு கடன்களை வழங்கியதோடு 600-க்கும் மேற்பட்ட தொடங்க வேளாண்மை கூட்டுறவுச் வங்கிகளுக்கும், 12,500 நியாய விலைக் கடைகளுக்கும், 3 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. அதேபோல், தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.20,000 கோடி விவசாய கடன்களை தள்ளுபடி செய்துள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய கடன் தொகைகளை நபார்டு வங்கிகளில் இருந்து 9 சதவீதத்திற்குக் கடனாகப் பெற்று, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 4,500 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் 1,500 வங்கிகளில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அரசிடமிருந்து நிதியினைப் பெற்று செயல்பட்டு வருகிறது. மேலும் 126 நகர வங்கிகளும், 70 நில வள வங்கிகள், 23 மத்திய வங்கிகளும், ஒரு மாநில வங்கியும் செயல்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு உற்ற நண்பனாகச் செயல்பட்டு வரும் கூட்டுறவு சங்கங்களில் கடன் பெற உள்ளூரில் உள்ள செயலாளர் மூலம் உறுதி செய்தவுடன் கடன் வழங்கப்படுவதால் விவசாயிகள் எளிதாக கடன் பெற முடிகிறது. விவசாயிகள், சிறு வியாபாரிகள், பொது மக்கள் என அனைத்துத்தரப்பினரும் பயனடையும் துறையாக கூட்டுறவுத் துறை விளங்குகிறது.

இக்கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியின் வாயிலாக பயிர்கடன், கால்நடை பராமரிப்புக்கடன், மத்தியக் காலக் கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன், மாற்றுத் திறனாளி கடன், வீட்டு வசதி கடன், மகளிர் சிறுவணிகக்கடன் மற்றும் வீடு அடமானக்கடன் என 3,024 பயனாளிகளுக்கு ரூ.33.99 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட வழங்கப்படுகின்றன.

மேலும், இந்நிகழ்ச்சியில் மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பரிசுகளும், மாவட்ட அளவில் சிறப்பாக செயலாற்றிய 39 கூட்டுறவு நிறுவனங்களுக்கு பாராட்டு கேடயங்களும் வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது. நலத்திட்ட உதவிகள் மற்றும் சிறப்பாகப் பணியாற்றி விருதுகளைப் பெற்றுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், சேலம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், சேகோ சர்வ் மேலாண்மை இயக்குநர் லலித் ஆதித்ய நீலம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.இரவிக்குமார், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் திருமதி இரா.மீராபாய், சரக துணைப் பதிவாளர் திருமதி முத்து விஜயா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

# அடிக்கல் நாட்டிய ஒரே ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் காலணி தொழிற்சாலை!

சென்னை, நவ.23-

அடிக்கல் நாட்டப்பட்ட ஒரு ஆண்டில் காலணி உற்பத்தி தொழிற்சாலை தொடங்க உள்ளது. அதன் தொடக்க விழா 28ந்தேதி நடைபெறவுள்ளது.

#### புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழகத்தில் 2022ம் ஆண்டு காலணி மற்றும் தோல் உற்பத்தி பொருட்கள் கொள்கை வெளியிடப்பட்டது. அதில் இருந்து இது வரை ரூ.2,250 கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. தோல் மற்றும் தோல் அல்லாத காலணி ஏற்றுமதி வர்த்தகத்தில் தேசிய அளவில் 48 சதவீத பங்களிப்பை தமிழகம் கொண்டுள்ளது. தமிழக அரசின் முழு ஆதரவு இருப்பதாலும், நிலத்தேவைகள், உள் கட்டமைப்பு தேவைகள் கிடைப்பதாலும், கம்பெனிகள் தங்கள் உற்பத் தியை மிக விரைவாக தொடங்க முடியும்.

#### தொடக்க விழா

அந்தவகையில், தமிழக அரசிடம் தொடர்பு கொண்ட நாளில் இருந்து ஒரு ஆண்டுக்குள், ஜே.ஆர்.ஒன்.கோத்தாரி காலணி நிறுவனம் தனது உற் பத்தியை மிக விரைவில் தொடங்க உள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில் முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதன் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டினார்.

சரியாக ஒரு ஆண்டு கழித்து இந்த மாதம் 28ந்தேதி அதன் தொடக்க விழா நடைபெறவுள்ளது. இதன் மூலம் 4 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்தநிறுவனத்தின் தொழிற்சாலை பெரம்பலூர் சிப்காட் தொழில் பூங்காவில் அமைந்துள்ளது. இது, ஒரு தொழிற்சாலை தனது உற்பத்தியை மிகக்குறு கிய காலத்திற்குள் தொடங்க முடியும் என்பதில், அரசுக்கும், நிறுவனங்களுக்கும் இடையே இருக்கும் உறவுக்கு நல்ல உதாரணமாகும்.

#### முதல்-அமைச்சரின் நோக்கம்

தமிழகத்தின் தொழில் முதலீட்டு வழிகாட்டி முகமை, தொழில்வளர்ச்சியில் முக்கியபங்கு வகிக்கிறது. தொழில் அங்கீகாரத்துக்கு தேவையான உதவிகளை செய்வது, வர்த்தகசேவைகளை வழங்குவது, இட மதிப்பீடு போன்ற வற்றில் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. இதுகுறித்து கருத்து கூறியுள்ள தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தோல் அல்லாத காலணி உற்பத்தி பிரிவை பெருமளவில் வளர்த்தெடுப்பதில் அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது. இதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகும்.

ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற முதல் அமைச்சரின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் இது முக்கிய பங்கு வகிக்கும் என்று கூறினார்.


## தமிழக அரசு தகவல்

தமிழ்நாடு அரசு
பாபநாசம் தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்
கலைஞர் 100 1924 - 2023

ந.க.எண். 39 / 2023 / அ1 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்.14.11.2023

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் பேரூராட்சியில் 2023-2024 -ம் ஆண்டு மூலதன மான்ய திட்டத்தின் கீழ் மீன் இறைச்சி மார்க்கெட் நவீனப்படுத்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து (இருஉறைமின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் வரவேற்கப்படுகிறது. நிறைவுசெய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 29.11.2023 புதன்கிழமை மாலை 3.00 மணி வரை இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படும்.30.11.2023 பிற்பகல் 3.30 மணிக்கு வருகைப்புரிந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை ரூபாய் | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பாபநாசம் பேரூராட்சியில் கீழவீதியில் உள்ள மீன் இறைச்சி மார்க்கெட் மேம்பாடு செய்தல் | 80.00 | 80000 | 180 நாட்கள் |

1.ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 16.11.2023 பிற்பகல் 3.00 மணி முதல் http://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்
2. இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

பெருந்தலைவர், பாபநாசம் தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ. / 6115 / ஒப்பந்தப்புள்ளி / 2023
செயல் அலுவலர், பாபநாசம் தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.

## பெருநகர சென்னை மாநகராட்சி
### மின்துறை
கலைஞர் 100 1924 - 2023

த.தெ.நு.மை.ந.க.எண்.சி1/1564/2023 **மறு ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**Purchasing of toners for HP / Samsung model printers available at various locations of Greater Chennai Corporation for a period of one year-க்கான ஒப்பம்**


| பணியின் மதிப்புத் தொகை 3,43,98,612/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 3,43,986/- |
|---|---|

ஒப்ப படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **06.12.2023 அன்று பிற்பகல் 3.00 மணி** ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **07.12.2023 அன்று பிற்பகல் 3.15 மணி**

செ.ம.தொ.இ / 6158 / ஒப்பந்தப்புள்ளி / 2023
**கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**


---

# முரசொலி மாறன் நினைவு, நம் நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும்!



நவம்பர் 23-அண்ணன் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாள்! அந்த ஒரு நாள் மட்டும் தானா அவரை நினைத்துப் பார்க்கிறோம். எப்போதெல்லாம் - முரசொலியை நினைக்கிறோமோ, இன்பத் திராவிடம் இதய கீதமாய் ஒலிக்கிறதோ, மாநில சுயாட்சி மனதை நனைக்கிறதோ- அப்போதெல்லாம் திராவிடச் சோதரர்க்கு நெஞ்சிருக்கும்வரை மாறன் நினைவினில் பளிச்சிடுகிறார்!

**“உருக்குலையா மங்கையவள் ஒளி முகத்தை முத்தமிட, கருக்கலிலே கண் விழிக்கும் திருக்குவளை”**யில் பிறந்த நாள் தொட்டே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கண்ணொளியின் கதகதப்பிலே வளர்ந்தவர் முரசொலி மாறன். எனினும் நிழல் பயிராக அல்ல; தனித்துவம் மிக்க தகவமைந்த மனிதராக வளர்ந்து உயர்ந்தார். அவருடைய ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் கலைஞரின் நினைவு வரும், எதிரொலி கேட்கும். **“என்னுடைய மனசாட்சி மாறன்”** என்று கலைஞர் அவர்களே வெளிப்படையாகப் பிரகடனம் செய்யும் அளவுக்கு அண்ணன் மாறன் அவர்கள், கலைஞருக்குத் தோன்றாத் துணையாக, கலைஞரின் வழியில் விழியாக, மொழியில் பொருளாக, இறுதிவரை எள்ளளவும் இடைவெளியின்றி இலட்சியப் பயணம் செய்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களையும், கலைஞரையும் அருகிருந்து பார்த்துப் பார்த்து, அங்குலம் அங்குலமாகத் தன்னைத் தானே செதுக்கிக் கொண்டவர் அண்ணன் மாறன். அண்ணா அவர்களின் ஆங்கிலப் புலமையையும், கலைஞரின் கன்னித் தமிழையும் கற்று வளர்த்துக் கொள்ளக் கணப்பொழுதும் தவறாமல் உழைத்தவர்.

**அத்தகைய அடிப் பீடத்தை இளமையிலேயே வலிமையாக அமைத்துக் கொண்ட காரணத்தினாலே தான், பக்குவப்பட்ட பத்திரிகையாளராக, முரசொலி நாளிதழ்- ‘தி ரைசிங் சன்’ ஆசிரியராக, தகுதி மிக்க தமிழ்த் திரைப்படக் கதை - வசன கர்த்தாவாக, திரைப்படத் தயாரிப்பாளராக, திரைப்பட இயக்குநராக, பல நூல்களை யாத்து வெளியிட்ட எழுத்தாளராக, நுட்ப அரசியல் விற்பன்னராக, அரசியல் சித்தாந்தங்களை முன்னெடுப்பவராக, வட புலத்தில் திராவிட அறிவியக்கத்தின் வளர் முகமாக, 36 ஆண்டுகள் நாடாளுமன்ற - மாநிலங்களவை உறுப்பினராக, ஒன்றியத்தில் நான்கு பிரதமர்கள் தலைமையில் அமைந்த வெவ்வேறு அரசுகளில் நிர்வாகத் திறன் வாய்ந்த அமைச்சராக, தமது பன்முக ஆற்றலைப் பாரறியச் செய்தவர் அண்ணன் மாறன்!**

மாமனுக்கேற்ற மகத்தான மருமகனாக விளங்கியவர் மாறன். கலைஞரைப் போலவே மிகவும் இளைஞராக 22 வயதிலேயே திரைக்கதை - வசன கர்த்தாவாகப் பரிணமித்தவர் மாறன். “குல தெய்வம்” திரைப்படம் வெளிவந்தது 1956-ஆம் ஆண்டில். திரைக் கதை - வசனம் முரசொலி மாறன். கிருஷ்ணன் - பஞ்சு டைரக்ஷனில் வெளிவந்த “குல தெய்வம்”,

1956 -ஆம் ஆண்டின் சிறந்த தமிழ்த் திரைப் படத்துக்கான தேசிய விருதுக்குரிய தகுதிச் சான்றிதழைப் பெற்றது. கூட்டுக் குடும்பத்தின் சிறப்பையும், பகுத்தறிவு இயக்கத் தாக்கத்தின் விளைவான விதவை மறுமணக் கருத்தையும் கொண்டது.

“குல தெய்வம்” திரைப் படத்தில் மாறன் எழுதியிருந்த “As long as India is on the map, there is Rabindranath Tagore in the hearts of millions. He was not only a Poet's Poet and was also a People's Poet…” என்று தொடங்கி பண்டரிபாய் பேசும் நீண்ட ஆங்கில வசனம், அந்தக் காலக் கல்லூரி மாணவர்களின் பேசு பொருளாக அமைந்தது. அது மட்டுமல்லாமல், பெண்களின் மேன்மையையும், ‘ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்!’ என்ற சமத்துவத்தையும் உணர்த்துவதாக அமைத்திருந்தார் முரசொலி மாறன். மகாகவி, பாவேந்தர், பட்டுக்கோட்டை பாடல்கள் படத்திற்கு மெருகு சேர்த்தன.

“குல தெய்வம்” திரைப்படத்தில், சகோதரர்களில் ஒருவராக, நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்திருந்த ராஜகோபால், சிறந்த நடிப்பு மற்றும் உரையாடல் காரணமாக, இறுதிவரை “குல தெய்வம் ராஜகோபால்” என்றே அழைக்கப் படலானார்.

அதற்குப் பிறகு 1958ல், “அன்னையின் ஆணை” திரைப்படம் முரசொலி மாறன் கதை வசனத்தில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பில் வெளிவந்து, தமிழ் நாட்டின் திசை எட்டும் இடி முழக்கமாய் எதிரொலித்தது. “அன்னையின் ஆணை”, தமிழில் சிறந்த திரைப் படத்திற்கான தேசிய விருதைப் பெற்றது. கலைஞரின் “சேரன் செங்குட்டுவன்”, “சாக்ரடீஸ்” ஓரங்க நாடகங்களுக்கு இணையாக, “அன்னையின் ஆணை”யில், முரசொலி மாறனின் “சாம்ராட் அசோகன்” எனும் ஓரங்க நாடகம் இடம் பெற்று, தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்து, பவுத்த தருமத்தின்பால் ஈர்ப்பினை ஏற்படுத்தியது.

“அன்புதான் இன்ப ஊற்று; அன்புதான் உலக ஜோதி; அன்புதான் உலக மகா சக்தி” என்ற வசனமும்; “புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி” என்பதும்; “யுத்த பேரிகை முழங்கட்டும், அதுவே விரைவில் ஜெய பேரிகையாக மாறி ஒலிக்கட்டும், வெற்றி வெற்றி, அதைத் தவிர இந்த அசோகனின் வாழ்க்கை அகராதியிலே வேறு எதுவும் இடம் பெறக்கூடாது…” என வரும் வசனத் தொகுப்பும் “அன்னையின் ஆணை”படத்தை, ஜெய பேரிகையாக முன்னெடுத்துச் சென்றது.

1959ல் முரசொலி மாறன் கதை -வசனத்தில், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில், டி.ஆர்.சுந்தரம் இயக்க வெளிவந்தது, “தலை கொடுத்தான் தம்பி” திரைப்படம். படத்தின் தலைப்பே, “தம்பி” என்று வாய்மணக்க அழைக்கும் அண்ணாவையும், “தம்பி உடையான் படைக்கஞ்சான்” என்ற அண்ணாவின் உறுதியையும், அனைவர்க்கும் நினைவூட்டியது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடிப்பில் 1970ல் வெளிவந்தது “எங்கள் தங்கம்”. அதில் மாறன் எழுதிய “பகுத்தறிவுப் பதயே, விஞ்ஞானந்தப் பஜே” என்று தொடங்கி, “பகுத்தறிவாளர்க்கும், பழைய பஞ்சாங்கத்திற்கும், சுந்தர வரதனுக்கும், சீனத்து ஜோசியருக்கும் டாட்டா” என்று முடியும் ‘சந்திர மண்டல விஜயம்’ ஓரங்க நாடகம், நாட்டில் பிரபலமானது.

**தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முரசொலி மாறன் அவர்களுக்கு உரிமையினால் உருவான அத்தியாயம் யாராலும் மாற்றிட இயலாதது. அதைப் போலவே திராவிட இயக்கச் சித்தாந்தங்களுக்கு உயிரோட்ட வடிவம் தந்த அவருடைய நுண்மாண் நுழைபுலத் திறன் மிகுந்த பணி எவராலும் மறுத்திட இயலாத ஒன்று. “சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பேச்சாளர்” என்று நாவலராலும், “தமிழகத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர்” என்று பேராசிரியராலும், போற்றப் பட்டவர் முரசொலி மாறன்.**

“காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்பு கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டத்தின் கீழ் முதலமைச்சராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொண்டிருப்பவனல்ல” என்ற தமது அனுபவ எண்ணத்தை அண்ணா உயிலாக நமக்கு வழங்கிச் சென்றிருக்கிறார்.

அண்ணாவின் உயிலுக்கு உயிர்த் துடிப்பு தந்தவர் கலைஞர். அண்ணாவின் உயிலை ஒளி ஓவியமாக வரைந்தவர் முரசொலி மாறன். அவர்களின் வழியைப் பின்பற்றி, மாநில சுயாட்சி முழக்கத்தை இந்தியா முழுவதும் எதிரொலிக்கச் செய்து வருபவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்! அத்தகைய முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக, சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டினை, ‘மாநில உரிமை மீட்பு மாநாடு’ என்று கூட்டுகிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் !

**மாநில சுயாட்சி என்றாலும், மாநில உரிமை மீட்பு என்றாலும், முரசொலி மாறன் அவர்களின் நினைவு அதில் அடிநாதமாகப் படிந்துள்ளது. கழகத்தின் சரித்திரத்தில் முரசொலி மாறன் எனும் கருத்தாக்கம் ( Concept ) என்றும் கற்றுத் தெளிவுபெறத் தக்கது. திராவிட இயக்க நினைவின் நிழலில் அவர் என்றென்றும் இயங்கிக் கொண்டே இருப்பார்!**

**: கி.இராஜமாணிக்கம் :**

●●●




முதலமைச்சரும், பல்கலைக்கழக வேந்தருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழாவில், மதிப்புறு முனைவர் பட்டத்தை கர்நாடக, இந்துஸ்தானி மற்றும் மேலைநாட்டு இசைக் கலைஞர் பி.எம். சுந்தரம் அவர்களுக்கு வழங்கினார். இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி, கலை பண்பாடு மற்றும் செய்தித்துறை அமைச்சரும், பல்கலைக்கழக இணை வேந்தருமான மு.பெ. சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், துணை வேந்தர் முனைவர் சீ. சௌமியா, பதிவாளர் திருமதி சிவசௌந்தரவள்ளி, கர்நாடக இசைக் கலைஞரும், சமூக செயற்பாட்டாளருமான டி.எம். கிருஷ்ணா, பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

<u>கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்</u>

## தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத்தலைவர்மு.க.ஸ்டாலின்அவர்கள்தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் வருகிற 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, தியாகராயர் நகர், “ஓட்டல் அகார்டில்” நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: **தி.மு.க. இளைஞர் அணி**
**2வது மாநில மாநாடு**
**மற்றும்**
**வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் (BLA2)**
**உறுப்பினர்களின் (BLC) பணிகள் குறித்து**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 21.11.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# சமூகநீதியைக் காக்கின்ற பல்கலைக்கழகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவிலேயே இசைக்காக உருவாக்கப்பட்ட ஒரே பல்கலைக்கழகம் என்ற பெருமை, இந்தப் பல்கலைக்கழகத்துக்குத்தான் உண்டு. முழுக்க முழுக்க மாநில அரசின் நிதி உதவியில் செயல்படும் பல்கலைக்கழகமாக இந்த பல்கலைக் கழகம் இருக்கிறது.

அதைவிட சிறப்பு என்னவென்றால், இந்தப் பல்கலைக் கழகத்துக்குத்தான், மாநிலத்தை ஆளுகின்ற முதலமைச்சரே வேந்தராக இருக்கின்ற உரிமை இருக்கிறது. அரசியல் எல்லாம் பேசவில்லை. எதார்த்தத்தைதான் பேசுகிறேன். இப்படி முதலமைச்சர்களே வேந்தர்களாக இருந்தால்தான், பல்கலைக்கழகங்கள் சிறப்பாக வளர முடியும்; வளரும்! மற்றவர்கள் கையில் இருந்தால், அதனுடைய நோக்கமே சிதைந்து போய் விடும் என்று நினைத்துத்தான், 2013ஆம் ஆண்டே இந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் முதலமைச்சர்தான் என்று அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். இதற்காக அவரை மனதார நாம் பாராட்டலாம்! இப்போது இருக்கக்கூடிய நிலையை நினைத்து நானும் மனமுவந்து பாராட்டுகிறேன்.

**இசை மேதைகளுக்கு பட்டம் தந்து பெருமைப்படுத்தி இருக்கிறோம்!**

இன்றைக்கு இசைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், பத்மபூஷன் பி.சுசீலா, பி.எம். சுந்தரம் என இரண்டு இசை மேதைகளுக்கு டாக்டரேட் பட்டம் கொடுத்து பெருமைப்படுத்தியிருக்கிறோம். இதன் மூலமாக, டாக்டர் பட்டமும் பெருமை அடைகின்றது. பாடகி சுசீலா அவர்களுடைய குரலில் மயங்காதவர்களே இருக்க முடியாது. அதில் நானும் ஒருவன். அவருடைய பாட்டை நான் எப்போதுமே வெளியூருக்கு இரவு நேரத்தில் பயணம் செய்யும் போது காரில் பாட்டைக் கேட்டுக்கொண்டே போவேன்.

எனக்கு மிகவும் பிடித்த பாட்டு, அடிக்கடி நான் பல இடங்களில் அதை பாடியிருக்கிறேன். “நீ இல்லாத உலகத்திலே நிம்மதி இல்லை; உன் நினைவில்லாத இதயத்திலே சிந்தனை இல்லை; காயும் நிலா வானில் வந்தால் கண்ணுறங்கவில்லை; உன்னை கண்டு கொண்ட நாள் முதலாய் பெண்ணுறங்கவில்லை”. அதனால் மேடைக்கு வந்தவுடனே அம்மையாரை பார்த்தவுடன் வணக்கம் சொல்லிவிட்டுதான், நான் உங்கள் ரசிகன் என்று சொன்னேன். வெளிப்படையாகவே சொன்னேன்.

இந்த இரண்டு மேதைகளுக்கு டாக்டரேட் பட்டம் கொடுத்து பெருமைப்படுத்தியிருக்கிறோம். இதன் மூலமாக டாக்டரேட் பட்டமும் பெருமை அடைகிறது. பாடகி சுசீலா அவர்களுடைய குரலில் மயங்காதவர்களே நிச்சயமாக இருக்கவே இருக்க முடியாது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் அப்படிப்பட்ட புகழைப் பெற்ற பாடகி அவர்.

அதேபோல், இசையில் அறிஞர் பி.எம்.சுந்தரம் அவர்கள். பன்முகத் திறமை கொண்டவர். மிகப் பெரிய இசை மரபில் பிறந்து, இசைத் துறைக்கு அரிய தொண்டாற்றி வருபவர். மங்கல இசை மன்னர்கள், மரபு தந்த மாணிக்கங்கள் போன்ற இசைத் துறையில் முக்கியமான நூல்களை படைத்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக தலைவர் கலைஞர் அவர்களின் மனதில் இடம் பிடித்தவர். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய தஞ்சை மண்ணைச் சார்ந்தவர். இப்படிப்பட்ட இசை வாணர்களுக்கு இன்றைக்கு நாம் பெருமை செய்திருக்கிறோம்.

**உச்சநீதிமன்றத்தில் நல்ல செய்தி வரும் என்று எதிர்பார்ப்போம்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினுடைய முதலமைச்சரான நான் இந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் இருப்பதால்தான் மக்கள் எண்ணத்தை பிரதிபலிக் கின்ற வகையில் இது போன்ற முடிவுகளை எடுக்கமுடிகிறது. அதனால் அனைத்து பல்கலைக்கழகங்களின் வேந்தராகவும் முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று நாம் சொல்கிறோம். அதற்கான சட்ட முன்வடிவுகளையும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறோம். இது தொடர்பான சர்ச்சைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. உச்சநீதிமன்றம் இது தொடர்பான வழக்குகளை விசாரித்து வருகின்றது. நல்ல செய்தி வரும். வரும் என்று எதிர்பார்ப்போம். வரவேண்டும் என்று எதிர்பார்ப்போம்.

செய்திகளில் பார்த்திருப்பீர்கள், நாளிதழில் படித்திருப்பீர்கள். மாநில அரசின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற வகையில், நேற்றைய தினம், நீதிபதிகள் கருத்துக்களை அதில் சொல்லியிருக்கிறார்கள். ஒத்திசைவு பட்டியலில் இருக்கும் கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படவேண்டும். இப்படி மாற்றினால் தான் எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் உயர்கல்வி என்ற இலக்கை மாநிலங்கள் எட்டமுடியும். நான் தமிழ்நாட்டிற்காக மட்டும் இப்படி சொல்லவில்லை. இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நான் அடிக்கடி சொல்வதுபோல, கல்வி தான் ஒருவருடைய நியாயமான சொத்து. அந்த கல்வி எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். அதற்கு எந்த தடையும் இருக்க கூடாது என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை.

நலிந்த நிலையில் இருக்கின்ற மரபுவழிக் கலைகள், பண்டைய தமிழ்ப் பண்பாட்டை பிரதிபலிக்கின்ற கலைகள், அந்தக் கலைகளை உயிர்ப்பித்து, வருங்கால தலைமுறைகளுக்கு கொண்டு செல்கின்ற முயற்சிகளில் இந்தப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. அதற்கான முழு ஒத்துழைப்பையும் மாநில அரசு வழங்கி வருகிறது.

இன்னொரு முக்கியமான சிறப்பு என்னவென்றால், மாற்றுத் திறனாளிகள் பலர், இந்தப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளில் இசை மற்றும் கவின்கலைகளை பயின்று தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துகிறார்கள். அந்த வகையில், சமூகநீதியைக் காக்கின்ற பல்கலைக்கழகமாக இந்தப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது.

இசை, நாடகத்துறை, திரைப்படத்துறை போன்றவற்றின் வளர்ச்சிக்கு, முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞருடைய பங்களிப்பு மகத்தானது. இந்தப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியாக இருக்கின்ற திருவையாறு அரசு இசைக் கல்லூரியை 1997ஆம் ஆண்டு தோற்றுவித்தவர் அன்றைக்கு முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

### பத்மபூஷன் பி.சுசீலாவுக்கு டாக்டரேட் பட்டம்!

**இன்றைக்கு இசைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், பத்மபூஷன் பி.சுசீலா, பி.எம். சுந்தரம் என இரண்டு இசை மேதைகளுக்கு டாக்டரேட் பட்டம் கொடுத்து பெருமைப்படுத்தியிருக்கிறோம். இதன் மூலமாக, டாக்டர் பட்டமும் பெருமை அடைகின்றது. பாடகி சுசீலா அவர்களுடைய குரலில் மயங்காதவர்களே இருக்க முடியாது. அதில் நானும் ஒருவன். அவருடைய பாட்டை நான் எப்போதுமே வெளியூருக்கு இரவு நேரத்தில் பயணம் செய்யும்போது காரில் பாட்டைக் கேட்டுக் கொண்டே போவேன். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் அப்படிப்பட்ட புகழைப் பெற்ற பாடகி அவர்.**

அதே ஆண்டு கிராமப்புற மாணவர்களும், இசைப் பயிற்சி பெற ஏதுவாக, 17 மாவட்டங்களில் 17 இசைப் பள்ளிகளை தோற்றுவித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

**தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் அனைவரும் சேர்ந்து பாட விதிமுறை!**

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய “நீராரும் கடலுடுத்த” பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அனைத்து அரசு விழாக்களிலும் இசைக்க வேண்டும் என்று 1970ஆம் ஆண்டே அரசாணையை பிறப்பித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். 53 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த மரபு அனைத்து அரசு விழாக்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இதை இசைத்தட்டுகள் மூலமாக ஒலிப்பதை விட எல்லோரும் சேர்ந்து பாடவேண்டும் என்று விதிமுறை வகுத்திருக்கிறது நம்முடைய திராவிட மாடல் அரசு. அந்த வகையில், அரசு விழாக்களில் உங்களை போன்ற மாணவர்கள் தான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பாடுகிறார்கள். எந்த விழாக்களாக இருந்தாலும், தமிழை வாழ்த்தித் தொடங்குகிறோம். அதே நேரத்தில், அதை இசையுடன் தொடங்குகிறோம் என்பது உங்கள் எல்லோருக்குமான பெருமை.

மண்ணையே ஐந்து வகையாக பிரித்த தமிழர்கள், பண்ணையும் ஐந்து வகையாக பிரித்து வைத்திருந்தார்கள். அதுதான் குறிஞ்சிப் பண், முல்லைப் பண், மருதப் பண், நெய்தல் பண், பாலைப் பண்.

இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆகிய முத்தமிழும் இணைந்ததுதான் நம்முடைய தமிழ் மொழி. இயல், இசை, நாடகம் என்று இப்போது நாம் சொன்னாலும், முதலில் தோன்றுவது நாடகம்தான். பின்னர் இசையாக வளர்ந்தது. இறுதியாகத் தான் இயல் உருவானது என்று தலைவர் கலைஞர் அவர்கள் கலை விழாக்களில் இதை அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

**அதைவிட சிறப்பு என்னவென்றால், இந்தப் பல்கலைக் கழகத்துக்குத்தான், மாநிலத்தை ஆளுகின்ற முதலமைச்சரே வேந்தராக இருக்கின்ற உரிமை இருக்கிறது. அரசியல் எல்லாம் பேசவில்லை. எதார்த்தத்தைதான் பேசுகிறேன். இப்படி முதலமைச்சர்களே வேந்தர்களாக இருந்தால்தான், பல்கலைக்கழகங்கள் சிறப்பாக வளர முடியும்; வளரும்! மற்றவர்கள் கையில் இருந்தால், அதனுடைய நோக்கமே சிதைந்து போய்விடும்.**

**இசைக்கலையை சிறப்பாக வளர்த்துவரும் பல்கலைக்கழகம்!**

இத்தகைய இசைக் கலையை சிறப்பாக வளர்த்து வரும் பல்கலைக் கழகமாக தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் அமைந்திருக்கிறது.

- முதன்முறையாக இந்த பட்டமளிப்பு விழாவில், ஆராய்ச்சிப் பட்டங்கள் (Ph.D) வழங்கப்பட்டிருக்கிறது.
- இந்தப் பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரியான டாக்டர் எம்.ஜி.ஆர் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் முதன்முறையாக B.V.A. பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.
- ஏறத்தாழ 3500 மாணவர்களுக்கு Ph.D., M.Phil., P.G., U.G., Diploma சான்றிதழ்கள் வழங்கப் பட்டிருக்கிறது.
- நாட்டார் கலைகள், வில்லுப்பாட்டு, சவுண்ட் இன்ஜினியரிங், மியூசிக் தெரபி மற்றும் வாய்ஸ் ரிலேட்டட் கோர்ஸ்கள் என்று புதுமையான படிப்புகள் தொடங்கப்பட்டிருக்கிறது.
- Indian Theatre of Arts for Integrated Development என்ற சமுதாயத்திற்கு பயனளிக்கும் படிப்பு தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இணைப்பு கல்லூரிகளின் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளும் உருவாகும்.
- மாணவர்கள் தற்போது மார்கழி இசை விழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் பங்கேற்கின்ற வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டு வருகிறது.

**இசை பல்கலைக்கழகத்தின் உண்மையான நோக்கம்!**

இவை எல்லாவற்றையும் சிறப்பாக செயல்படுத்தி வரும் துணைவேந்தர் சௌமியா அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். இசையரசியாக உலகம் முழுக்க வலம் வந்த சௌமியா அவர்கள், தன்னுடைய இசைத்திறனை எல்லோருக்கும் கற்பித்து வருகிறார். இசையுலகில் அவர் வாங்காத விருதே இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு விருதுகளை வாங்கியவர் இவர்.

இசையை படிப்பாக மட்டும் வழங்காமல், இசைக்கலையை வளர்க்கின்ற பல்கலைக் கழகமாக செயல்பட்டு வருவது பாராட்ட வேண்டிய ஒன்று. இசைப் பல்கலைக்கழகத்தின் உண்மையான நோக்கம் இதுதான்!

கலை, இலக்கியம் என்பது பழைய பெருமைகள் இல்லை; எதிர்காலத் தேவைகள்! தமிழர் பண்பாட்டின் அடையாளங்கள்!

இயல், இசை, நாடகத்தை காப்பாற்றுவது என்பது தமிழைக் காப்பாற்றுவது! தமிழினத்தைக் காப்பாற்றுவது! அந்த வகையில், தமிழ் இசைக்கும், தமிழ்ப் பாடல்களுக்கும் எல்லோரும் அதிக முக்கியத்துவம் தரவேண்டும்; அதற்கு இசைப் பல்கலைக்கழகம் ஊக்கமளிக்க வேண்டும்.

**இரண்டு அறிவிப்புகள்!**

பழந்தமிழ் இசை நூல்கள் மீட்டெடுக்கப்பட வேண்டும். புதிய இசை நூல்கள் எழுதப்பட வேண்டும். இதில் எல்லாம் இந்த பல்கலைக் கழகம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**அதற்கு ஊக்கமளிக்கின்ற வகையில், இந்தத் தருணத்தில் இரண்டு அறிவிப்புகளை இங்கே நான் வெளியிட விரும்புகிறேன்.**

- **தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்திற்கான அரசு மானியம் 3 கோடி ரூபாயாக உயர்த்தி அடுத்த நிதியாண்டிலிருந்து வழங்கப்படும்.**
- **தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மையம், நூலகம் மற்றும் கற்றல் மேலாண்மை அமைப்புமுறை அமைக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## ஆராய்ச்சி மையம் - நூலகம் அமைக்க 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

இசைப் பட்டம் பெற்றுள்ள மாணவச் செல்வங்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

இந்த பட்டங்கள் உங்களுடைய கலை ஆர்வத்திற்கான தொடக்கம்தான்; அடிப்படை தான்!

உங்கள் கலையை, உங்களுக்காக மட்டுமல்ல, இந்த நாட்டுக்காக பயன்படுத்துங்கள். நல்ல இசை என்பது, எல்லா நன்மைகளுக்கும் காரணமாக இருக்கிறது.

**பேரறிஞர் அண்ணா சொன்ன அறிவுரை!**

பட்டமளிப்பு விழா ஒன்றில் பேரறிஞர் அண்ணா சொன்ன அறிவுரையை, இங்கே உங்களுக்கு நினைவூட்ட நான் விரும்புகிறேன்...

“நாட்டிற்குத் தொண்டாற்ற உங்களுக்குக் கிடைத்திருக்கும் அனுமதிச் சீட்டே இந்த பட்டங்கள் தான்”.

“தமிழ் உமது முரசமாகட்டும், பண்பாடு உமது கவசமாகட்டும். அறிவு உமது படைக்கலனாகட்டும். அறநெறி உமது வழித்துணையாகட்டும்” என்றார் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

அண்ணாவின் அறிவுரையை கடைப்பிடிப்பீர்!

கலைஞர்களே... கலையை வளர்ப்பீர்!

கலை மூலமாக தமிழைக் காப்பீர்!

பட்டம் பெற்ற அனைவரையும் வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தி.மு.க. இளைஞர் அணி 2வது

## மாநில மாநாட்டு இருசக்கர வாகன பிரச்சார பேரணி!

### திருவாரூர் மாவட்டத்தில் உற்சாக வரவேற்பு!

திருவாரூர், நவ.23-


தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுவதையொட்டி, மாநிலம் முழுவதும் இருசக்கர வாகன பிரச்சார பேரணியை கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் ஆலோசனைகளின்படி, இளைஞர் அணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த பிரச்சார பேரணியில் பங்கேற்பவர்கள் வள்ளுவர்மண்டலம், பெரியார்மண்டலம், அண்ணா மண்டலம், கலைஞர் மண்டலம் என நான்கு மண்டலமாகப் பிரித்து அவைகளில் அணி அணியாகச் சென்று பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

கலைஞர் மண்டலமான திருவாரூர் மாவட்டம் முழுவதும் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம், திருவாரூர் என நான்கு தொகுதிகளிலும் இந்த இருசக்கர வாகன பேரணி சென்ற நிலையில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் அவர்களின் ஆலோசனைகளின்படி அனைத்து இடங்களிலும் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் திரண்டுநின்று உற்சாக வரவேற்பளித்தனர்.

வாகனத்தை ஓட்டி பிரச்சாரம் செய்து வரும் இளைஞர்களை மாவட்ட எல்லையான வடுவூரில் வரவேற்று திருவாரூர் கலைஞர் கோட்டம் வரை பேரணியை எழுச்சியோடு திருவாரூர் மாவட்ட கழகமும், இளைஞர் அணியும் வழிநடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி மாநாடு பிரச்சாரத்தை மேற்கொண்டது. மேலும் வழிநெடுகிலும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் பொதுமக்களும் நீட் தேர்வு விலக்குக்கான கையெழுத்து இட்டு அதனை இளைஞர் அணி நிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்வில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர் நா.இளையராஜா, சேலம் ராஜா, மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.பி.எடிசன், வினோத்கு மார், தாகிர் அலி, கல்யாண சுந்தரம், சி.கே.எழிலரசன், முருகானந்தம், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கிளைக்கழக நிர்வாகி கள், அனைத்து சார்பு அணிகளின்பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்



## முரசொலி மாறன்

**நவம்பர் 23 (2003)**

“திராவிட இயக்க முன்னோடி – கழகத்தின் தூண் – ஈடில்லா சிந்தனைச் செம்மல் – மாபெரும் ராஜதந்திரி – முரசொலியின் பிதாமகன் – கழகத்தின் மூளை – கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.

தமது 35 ஆண்டு காலத்திற்கும் மேலான நாடாளுமன்ற அனுபவத்தால், நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும்புகழ் பெற்றவர்.

எழுத்தாளராக, பத்திரிகையாளராக, திரைப்பட கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.

தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லாமல் கழகமே மூச்சென பணியாற்றிய பண்பாளர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில்

## 2,728 பயனாளிகளுக்கு ரூ.31.45 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

திருப்பூர், நவ.23-

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் ஜெயராணி மஹாலில் நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 2,728 பயனாளிகளுக்கு ரூ.31.45 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் 20.11.2023 திங்கட்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் ஜெயராணி மஹாலில் நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 2,533 பயனாளிகளுக்கு ரூ.2,550.00 இலட்சம் மதிப்பீட்டில் பயிர்கடனுதவிகளும், 91 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.449.00 இலட்சம் மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக்கடன்களும், 19 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8.75 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும், 25 நபர்களுக்கு ரூ.6.55 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவணிககடன் உதவிகளும், 24 நபர்களுக்கு ரூ.32.87 இலட்சம் மதிப்பீட்டில் மத்தியகாலக்கடனுதவிகளும், 17 நபர்களுக்கு ரூ.18.99 இலட்சம் மதிப்பீட்டில் டாம்கோ கடனுதவிகளும், 2 நபர்களுக்கு ரூ.18.63 இலட்சம் மதிப்பீட்டில் தாட்கோ கடன் உதவிகளும், 4 நபர்களுக்கு ரூ.1.90 இலட்சம் மதிப்பீட்டில் டாப்செட்கோ கடன் உதவிகளும், 7 நபர்களுக்கு ரூ.29.91 இலட்சம் மதிப்பீட்டில்வீட்டு அடமானக்கடன் உதவிகளும், 1 நபருக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டுவசதி கடன் உதவிகளும், 1 நபருக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் சரக்கீட்டுக் கடன் உதவிகளும், 4 நபர்களுக்கு ரூ.15.30 இலட்சம் மதிப்பீட்டில் பண்ணை சாராக்கடன் உதவிகளும் என மொத்தம் 2,728 நபர்களுக்கு 31.45 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், 70வது கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு 6 முதல் 10 வகுப்பு வரையிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், மாவட்ட சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு நினைவு பரிசும், கலைஞர் 100 வினாடி வினா நிகழ்ச்சியில் மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற குடிமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி ஆர். யாழினிக்கு நினைவு பரிசினையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், மின் விபத்து ஏற்பட்டு உயிரிழந்த நபரின் குடும்ப த்தாருக்கு ரூ.5.00 இலட்சத்திற்கான இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையினையும் மற்றும் 4 கூட்டுறவு சங்கங்களுக்கு டிராக்டர்களையும் அமைச்சர் வழங்கினார்.

இவ்விழாவில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.சீனிவாசன், ஒன்றிய கழக செயலாளர்கள் சா.ராஜமாணிக்கம், எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, க.செந்தில்குமார், அடிவள்ளி முரளி, தலைமை செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ், பொதுக்குழு உறுப்பினர் யு.என். பி.குமார், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் கந்தசாமி, தமிழ்ச்செல்வன், எம்.துரைராஜ், சே.முத்துசாமி, ப.தமிழரசு, துணைப் பதிவாளர் (பயிற்சி) காலிதாபானு, கூட்டுறவு சங்கத் தலைவர்கள், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.

## ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தஞ்சை, நவ. 23 -

தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு!

வரும் 24.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டம், பட்டுக்கோட்டை தஞ்சை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் சுப.சேகர் தலைமையிலும், தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் சுப.சரவணன், ஜி.மனோகரன் ஆகியோரின் முன்னிலை



யிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பொருள்:** 1. நவம்பர் 25,26 தேதிகளில் நடைபெறும் வாக்காளர் சேர்த்தல் சிறப்பு. முகாம், BLA 2 மற்றும் BLC உறுப்பினர்கள், வாக்காளர்பட்டியல் 2. பிரித்தெடுத்தல். 3. கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா.4 டிசம்பர் 17சேலம் இளைஞரணி 2வது மாநில மாநாடு.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம் காளப்பட்டியில் நடைபெற்ற இணைப்பு விழாவில் அ.தி.மு.க., தே.மு.தி.க., அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வுகளில் த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன், எஸ்.எஸ்.கருப்பையா, கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், ஆர்.ஆர்.சாமிநாதன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, கே.பி.அய்யப்பன், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.செந்தில்குமார், முகம்மது நிஷா, டி.செல்வம், கை.பழனிச்சாமி, கே.எஸ்.ச. இளையச்சூரியன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், பொன்.பாரிவள்ளல், டாக்டர் அமானுல்லா மற்றும் பலர் உள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்படும்!

## தேவையான அளவு உரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கையிருப்பு உள்ளது!

### புதுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி

புதுக்கோட்டை, நவ.23-

புதுக்கோட்டை மாலையீடு அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 2023ன் மாநில அளவிலான தொடக்க விழாவில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி, தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் பங்கேற்று விழாவினை தொடங்கி வைத்தனர். மேலும் இந்த விழாவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை எம்எல்ஏ வை.முத்துராஜா, கந்தர்வகோட்டை எம்எல்ஏ சின்னத்துரை, மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த விழாவுக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறுகையில்:

கூட்டுறவு சங்க தேர்தலை நடத்துவது மட்டுமல்ல ஜனநாயகத்தை காப்பதிலும் அதை தேர்தல் ரீதியாக சந்திப்பதிலும் தி.மு.க. என்றைக்கும் தயங்கியது இல்லை, தற்போதைய முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது கூட அன்றைய ஆளுங்கட்சி முதலமைச்சரை பார்த்து உள்ளாட்சி தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வலியுறுத்தியது மட்டுமல்லாமல் நீதிமன்றம் சென்று அந்தத் தேர்தலை நடத்த வழிவகை செய்தவர்தான் தற்போதைய முதலமைச்சர்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நகர்ப்புறமாக இருந்தாலும் சரி கிராமப்புறமாக இருந்தாலும் சரி ஒரே கட்டத்தில்நடத்தக்கூடிய தேர்தல் வழக்கத்தை மாற்றி பொருட்களைவாங்கிஎப்படி தவணை செலுத்துவோமோ அதே போல் தவணை முறையில் தேர்தலை நடத்தினார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி காட்டுவோம் என்று கூறி வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்ததுடன் உள்ளாட்சித் தேர்தலை நடத்திக் காட்டியவர் தான் முதலமைச்சர்.

அதேபோல் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை நடத்துவதில் எந்தவித தயக்கமும் இல்லை. ஆனால் கடந்த 10 ஆண்டு காலத்தில் அதிமுக நடத்திய இரண்டு தேர்தல்களிலும் முறையான அங்கத்தினர்கள் இல்லை, அதில் நிறைய குளறுபடிகள் உள்ளது.

25 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போன நபர்கள் கூட வாக்காளர் பட்டியிலில் நீக்காமல் அதில் இடம் பெற்றுள்ளனர். அதனை சீர் செய்ய வேண்டும் என்று தான் பொது நல வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் இவற்றையெல்லாம் முறைப்படுத்த வேண்டும் அதேபோல் அவர்கள் அட்டவணையை தயார் செய்து கொடுத்துள்ளனர். தேர்தல் நடத்துவது முக்கியம்தான். ஆனால் அதில் உள்ள வாக்காளர் பட்டியலை முறைப்படுத்தி விட்டு தேர்தல் நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

ஜனநாயகம் தேர்தல் மூலமாக தான் நிலை நிறுத்த முடியும். அதை செய்ய தி.மு.க. என்றைக்கும் தயங்கியது கிடையாது. கூட்டுறவு தேர்தலை நடத்த வேண்டும் என்றால் முதலில் அதற்கான அடிப்படை என்னவென்றால் வாக்காளர் பட்டியலை சரி படுத்த வேண்டும். தி.மு.க. ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் ஆனாலும் கூட்டுறவு சங்கங்களுக்கான சில பதவிகள் ஒரு மாதத்திற்கு முன்பு தான் முடி வடைந்துள்ளது மேலும் ஜனவரி மாதம் வரை 170 சங்கங்களுக்கான பதவிக்காலம் உள்ளது. அனைவரது விருப்பமும் கூட்டுறவு சங்க தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் அதில் உள்ள குளறுபடிகளையும் வாக்காளர் பட்டியலை சரிப்படுத்திய பிறகு தேர்தல் நடத்தப்படும்.

கூட்டுறவுத் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். அதேபோல் அரசு மற்



றும் தனியார் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது இந்தியாவிலேயே தமிழகம் தான் தொழில் செய்வதற்கு ஏற்ற மாநிலம் என்று பலரும் விரும்பு கின்றனர். வரக்கூடிய ஜனவரி மாதம் கூட முதலீட்டாளர் மாநாடு நடைபெற உள்ளது. இந்நிலையில் தான் புதிய முதலீட்டாளர்கள் தொடங்கக்கூடிய தொழில்களில் உள்ள வேலை வாய்ப்புகள் அதே போல் அரசில் உள்ள காலி பணியிடங்களை படித்த இளைஞர்களுக்கு ஏற்படுத்தி தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுத் துறையை பொறுத்தவரை அவ்வப்போது ஏற்படுகின்ற காலி பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிப்பு செய்து வருகிறோம். விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்க செயலாளர்கள் நகர்ப்புற வங்கிகளில் உள்ள காலி பணியிடங்கள் உள்ளிட்டவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவு வங்கிகள் ஏற்கனவே ஆர்.பி.ஐ. கட்டுப்பாட்டில் மேற்பார்வையில் தான் உள்ளது. அது நல்ல ஒரு பாதுகாப்பு. பொதுமக்கள் ஏமாந்து விடாமல் இருப்பதற்கான வழியாக இருக்கும். அதனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகளும் முறையாக பயன்படுத்தப்படும்.

புதுக்கோட்டை நகர கூட்டுறவு வங்கிக்கு ஆர்பிஐ 25000 ரூபாய் அபராதம் விதித்துள்ள கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் பெரியகருப்பன் 6000, 7000 வங்கிகள் உள்ள நிலையில் அதில் ஒன்றில் தவறு நடந்ததால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அது சரி செய்யப்படும்.

பல கூட்டுறவு சங்கங்கள் கடந்த அதிமுகவின் 10 ஆண்டுகள் ஆட்சியில் தொய்வு நிலை சந்தித்த நிலையில் தற்போது அவற்றையெல்லாம் மீண்டும் புத்துயிர் ஊட்டுகின்ற பணியை தற்போதைய திமுக அரசு செய்து வருகிறது. அதில் சில வங்கிகளுக்கு ஆர்பிஐ உதவியுடன் நிதி உதவி செய்து சங்கங்கள் எல்லாம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். உரத்தட்டுப்பாடு எந்த இடத்திலும் இல்லை தேவையான அளவு உரங்கள் அனைத்து மாவட்டத்திலும் கையிருப்பு உள்ளது. அதனை அத்துறை பதிவாளர் கண்காணித்து வருகிறார்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் என்பது மாநில அரசு கொடுப்பதல்ல, ஒன்றிய அரசு வழங்குவது. காங்கிரஸ் அரசில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு தேவையான மண்ணெண்ணெய் வழங்கினார்கள் தற்பொழுது மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்றால் அதற்கு ஒன்றிய அரசு தான் காரணம்.

விவசாயிகள் கடன் வழங்கி உள்ள நிலையில் விவசாயிகள் கடன்களை திருப்பிக் கொடுத்து புதுப்பித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.




திருப்பூர் மாநகராட்சி, மண்டலம்4, வார்டு 40, கே.என்.எஸ்.நகர் 2,3,4,5வது வீதி மற்றும் காமாட்சி அம்மன் நகர் 1,2,3,4,5வது மெயின் வீதி மற்றும் 1,2,5 குறுக்கு வீதிகளில் DAIF20232024ன் திட்டத்தின் கீழ் ரூ.151.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார் துவக்கி வைத்தனர். இதில் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், பகுதி கழக செயலாளர் பி.முருகசாமி, வட்டக் கழக செயலாளர் தே.ந.சீனிவாசன், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் சுபத்ராதேவி ஆனந்தன், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துரை.ரவிச்சந்திரன், கோ.ஆனந்தன், ப.கலைச்செல்வி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2023) நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவையை துவக்கி வைத்து, புறநோயாளி உள்நுழைவுச் சீட்டினை வழங்கினார்கள். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, உட்பட பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், நல்லிபாளையம், 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா – 2023 ராயல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 3470 பயனாளிகளுக்கு ரூ.31.30 கோடி மதிப்பிட்டில் அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட அளவிலான 50 சிறந்த கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களை பாராட்டி பரிசுகள், பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நகர்மன்ற தலைவர்கள் து.கலாநிதி (நாமக்கல்), எம்.செல்வராஜ் (பள்ளிபாளையம்), கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் க.பா.அருளரசு, திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் முனைவர் ஏ.விஜயசக்தி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மணப்பாறையில் ரூ. 10 கோடி மதிப்பில்

# மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கு புதிய கட்டிட கட்டுமானப்பணி!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருச்சி, நவ. 23- திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ரூ. 10 கோடி மதிப்பில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கான புதிய கட்டிடம் கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டும் விழா காமராஜர் சிலை அருகில் உள்ள பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கலந்துகொண்டு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கான புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினர்.

அதன் பின்னர் ரூ. 30 லட்சம் மதிப்பில் மணப்பாறை அருகே கொடும்பப்பட்டியில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய கல்வெட்டையும் திறந்து வைத்தனர்.

விழாவில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாமெல்லாம் ஏ.எம் மற்றும் பி.எம் ல் தான் (காலை, மாலை) வாக்கிங் செல்வோம் ஆனால் சி.எம் கூட வாக்கிங் செல்லும் அமைச்சர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மட்டும்தான். கொரோனா காலகட்டத்தில் திமுக ஆட்சிப்பொறுப் பேற்றது. அப்போது இருந்த காலகட்டத்தில் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தமிழகம் முழுவதும் சுற்றி வந்து பல உயிர்களை காப்பாற்றினார். அவருக்கு உறுதுணையாக மருத்துவர்கள், செவிலியர்கள் என அனைவரும் சேர்ந்து பணியாற்றினார்கள் . இவர்களுக்கு எல்லாம் தலைமை மருத்துவராக செயல்பட்டவர்தான் தமிழ்நாட்டின் முதல மைச்சர் தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது பாதுகாப்பு அங்கியை அணிந்து கொண்டு கொரோனா வார்டுக்கு உள்ளே சென்று நோயாளிகளுக்கு ஆறுதலை சொல்லி விட்டு வந்த இந்தியாவிலேயே ஒரே முதலமைச்சர் தமிழ்நாட்டின் முதல மைச்சர் தான். என பெருமிதத்தோடு தெரிவித்தார்.

பின்னர் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன்,

2012 இல் இருந்து ஒன்றிய அரசு சிறந்த மருத்துவமனைகளுக்கு தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது வழங்கி வருகிறது. இதுவரை தமிழ்நாட்டிற்கு 556 விருதுகள் கிடைத்துள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் இந்த விருது கிடைத்துள்ளது. திமுக அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே மொத்தம் 487 விருதுகள் பெற்றுள்ளது. மொத்தம் 556 வருதுகளில் 487 திமுக ஆட்சி காலத்தில் கிடைத்துள்ளது என்றால் கடந்த 10 ஆண்டுகளில் அதிமுக ஆட்சி காலத்தில் வெறுமனே 69 மட்டுமே பெற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 487 விருதுகள் கிடைத்துள்ளது என்றால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் புதிய கட்டமைப்புகளை மேம்படுத்தியது புதிய சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தியது என்று பல்வேறு வகைகளில் செய்து வரும் காரணத்தினால் தான் விருதுகள் கிடைத்தன. சட்டமன்றத்தில் புற்று நோய்க்கான பரிசோதனைகள் தொடங்கும் என்று அறிவித்தோம் அதன்படி நாளை மறுநாள் 22 ஆம் தேதி காலை ஈரோட்டில் துவக்கி வைக்க உள்ளோம். ஈரோடு, திருப்பூர், ராணிப்பேட்டை, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் புற்று நோய்க்கான பரிசோதனைகள் துவங்கப்படவுள்ளது. 7 மாதங்களில் இந்த பரிசோதனையில் முழுமையாக நிறைவுபெறும். கரூர் மாவட்டத்திலும் புற்று நோய் பாதிப்பு அதிகமாக உள்ளது என கரூர் எம்பி தெரிவித்துள்ளார் அதனை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று அடுத்த நிதியாண்டில் அதனையும் சேர்த்து அடுத்த ஆண்டு கரூர் மாவட்ட மக்களுக்கும் ஒட்டுமொத்த பரிசோதனை செய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கரூர் எம். பி. ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### விழுப்புரம் வருகை தந்த

# இளைஞர் அணி மாநாடு விளக்க வாகனப் பிரச்சாரம்!

## அமைச்சர் க.பொன்முடி தலைமையில் வரவேற்பு!

விழுப்புரம், நவ 23- விழுப்புரம் வருகை புரிந்த இருசக்கர வாகன பிரச்சாரக் குழுவினர் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் . மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ. முன்னிலையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து விழுப்புரம் நகரம், கோலியனூர் ஒன்றியம், வளவனூர் பேரூராட்சி, கண்டமங்கலம் ஒன்றியம், கோட்டக்குப்பம் நகரம், வானூர் கிழக்கு மற்றும் மேற்கு, கிளியனூர்

ஆகிய பகுதிகளில் பேரணியாகச் சென்றனர்.

சட்டமன்ற டாக்டர் இரா.இலட்சுமணன் , மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன்,, நகரச் செயலாளர் இரா. சக்கரை, நகர மன்றத் தலைவர் ச. தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றிய குழுத் தலைவர்கள் ஆர். எஸ். வாசன், சச்சிதானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ தினகரன், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சுவை. சுரேஷ். ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி.க, பி. தெய்வசிகாமணி, வே. கணேசன், வி. ஜி. பிரபாகரன், கு. செல்வ மணி,

பி. கே. டி. முரளி, எஸ். எஸ். ஜெயமூர்த்தி, மைதிலி இராஜேந்திரன், கிளியனூர் இராஜி , பேரூர் செயலாளர் பா. ஜீவா, ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி. கே. டி முரளி, துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாஸ்கரன், பொதுக் குழு உறுப்பினர் இளங்கோ, டி. என். ஜெ. சம்பத் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜ வேல்,பிரேம், தேவேந்திரன் நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ. மணி கண்டன், வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், விவசாய அணி சீனு. செல்வ ரங்கம், சிறுபான்மை அணி டி. என். ஏ தமின், மருத்துவர் அணி செந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு, சுற்றுச்சூழல் அணி சம்பத் குமார் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கௌதம், ஆதி திராவிடர் நலக் குழு தலைவர் வேலுஜி, சுகுமார், ஜாகிர் உள்ளிட்ட மாவட்ட , நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட

# பொருளாதார மண்டலமாக மாற்றுவதே முதலமைச்சர் இலக்கு!

## பெரம்பலூரில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கான சிறப்பு கூட்டத்தில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு!



பெரம்பலூர்,நவ,23- பெரம்பலூர் மாவட்டத்தில் 2024ம் ஆண்டிற்கான உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சிறு, குறு தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களுடனான சிறப்பு நோக்குக் கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் ரூ.54.58 கோடி மதிப்பில் பல்வேறு தொழில்கள் தொடங்க உள்ள 11 நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு பரிமாற்றிக் கொள்ளப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம். சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சியில் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகின்றார்கள். சென்னையில் வருகிற 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7, 8 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டா ளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் பல்வேறு நிறுவனங்கள் தொழில் தொடங்க வழிவகை ஏற்படுத்தப்படும். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுவதுடன் பொருளாதார முன்னேற்றத்தில் தமிழகம் சிறந்து விளங்கும். உலக முதலீட்டாளர்கள் மாநாட்டையொட்டி ரூ.150.00 கோடிக்கான தொழில்சார் முதலீடுகளை ஈர்ப்பதென பெரம்பலூர் மாவட்டத்துக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில் தற்போதுவரை 33 தொழில் நிறுவனங்கள் சார்பில் ரூ. 138.73 கோடிக்கு பல்வேறு வகையான தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதன் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 1973-1976 ஆண்டு ஆட்சிகாலத்தில் பொற்கால ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது என்றால் அது மிகையாகாது. அவருடைய ஆட்சியில்தான் ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் போன்ற பகுதிகளில் ஹூண்டாய், போர்டு போன்ற பெரிய தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் வந்தது. ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்தது.

ஒரு நிறுவனம் ஒரு நாட்டில் தொழில் தொடங்க வேண்டும் என்றால் பல்வேறு வசதிகளை அந்த மாநிலம் பெற்றிருக்க வேண்டும். அடிப்படை வசதிகள் மேம்பாடு பெற்றிருக்க வேண்டும், சட்டம் ஒழுங்கு சூழல் சிறப்பாக இருக்க வேண்டும். ஆட்சியை நடத்தும் தலைமை நம்பிக்கைக்குரிய தலைமையாக இருக்க வேண்டும். அப்படி நம்பிக்கையினைப் பெற்ற தலைமையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சி திகழ்கின்றது. அதனால்தான் எண்ணற்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வருகின்றன.

நமது பெரம்பலூர் மாவட்டத்தில் சிப்காட் தொழில் பூங்காவில் பீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத்தின் சார்பில் காலணி உற்பத்தி தொழிற்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. சுமார் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித்தரும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சென்னையைச் சுற்றிதான் தொழில் வளர்ச்சி பெருகி வந்தது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான் தென் தமிழகத்திலும் தொழில் நிறுவனங்கள் பெருகத்தொடங்கின. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் வாய்ப்புகள் பெருகும் சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட தொழில் மையம், தாட்கோ மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகிய துறைகளின் மூலம் சார்பில் 20 பயனாளிகளுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.70 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஜெ.பிரபு ஜெயக்குமார் மோசஸ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், தாட்கோ மேலாளர் சுந்தரம், மாவட்ட ஊராட்சிக்குழுத் துணைத்தலைவர் ம. முத்தமிழ்ச்செல்வி மதியழகன்,

மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர்,டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் ஆதி திராவிடர் - பழங்குடியின

# விவசாயிகள் நிலம் வாங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தகவல்!

சென்னை, நவ. 23 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தலைமை அலுவலக கூட்ட அரங்கத்தில் நேற்று முன்தினம் (21.11.2023) தாட்கோ தலைவர் உ.மதிவாணன் தலைமையில் தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி முன்னி லையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த விவசாயிகள் நிலம் வாங்குவதற்கு குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜால் செய்யப்பட்டது .

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில் நேற்று (21.11.2023)இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் நிலம் வாங்குவதற் கான புரிந்துணர்வு ஒப்பந்தம்செய்யப்பட்டுள்ளது .

2022-23 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்பின்படி 200 நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யின விவசாயத் தொழிலாளர்கள் நிலம்வாங்க ரூ. 10.00 கோடி மானியம் தாட்கோ மூலம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.74, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (சிஉதி) நாள். 10.09.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

விவசாய நிலம் வாங்க நிலத்தின் விலையில் 50 % அல்லது அதிகபட்சமாக ரூ. 5.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும் இத்திட்டத்தின் மூலம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் 200 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் நிலமற்ற விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ. 375.00 இலட்சம் மானியமாக விடுவிக்கப்பட்டு 87 விவசாயிகள் நிலம் வாங்கி பயனடைந்துள்ளார்கள்.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தங்களுடைய நில உடைமையை அதிகரிக்க அரசு தாட்கோ மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டபோது அவர்களுக்கு எளிய முறையில் வங்கியில் நிதி வசதி கிடைக்காததால், பயனாளிகள் நிலம் வாங்கும் திட்டத்தில் சொற்ப அளவே பயன் அடைந்தார்கள். பயனாளிகளின் எண்ணிக்கையை உயர்த்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யின விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு தாட்கோ மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தற்போழுது தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழக நிதியில் ருந்து நிதியினை பெற்று பயனாளிகளுக்கு 6 % மிக குறைந்த வட்டியில் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் கடனுடன் மானியம் பெற புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

இவ்விழாவில் இந்தியன் ஓவர் சீஸ் வங்கி நிர்வாக இயக்குநர் சஞ்சய் விநாயக் முதலியார், இந்தியன் ஓவர் சீஸ்வங்கி, பொது மேலாளர், எம்.மோகன், தாட்கோ, பொதுமேலாளர் (நிர்வாகம்) திருமதி. தா. பரிதா பானு தாட்கோ, மாவட்ட மேலாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# தஞ்சை கூத்தரசனின் 78 வது ஆண்டு பிறந்த நாள் விழா!

## கழக இலக்கிய அணிப் பொருளாளர் நா.சந்திரபாபு அறிக்கை!

சென்னை, நவ. 22 - தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் அரிமா முனைவர் நா.சந்திரபாபு தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தி.மு.க.வின் முன்னணிப் பேச்சாளரும் கழகத் தலைமை இலக்கிய அணியின் புரவலருமான தஞ்சை கூத்தரசனின் 78வது ஆண்டு பிறந்த நாள் நாளை (24.11.2023) வருகிறது.

24.11.1946 ஆம் ஆண்டு பிறந்த அவருக்கு 78 வது ஆண்டு பிறந்த நாள் விழாவும், 24.11.1951 ல் பிறந்த அவரது துணைவியார் திருமதி இந்துமதிக்கு 73வது ஆண்டு பிறந்த நாள் விழாவும் 24.11.2023 அன்று ஒரு சேர வருகிறது.

இவர்கள் இருவரின் பிறந்த நாள் விழா, 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில், சந்திரசேகர் பவுண்டேசன், ஜி.3, டாக்டர். விசுவேசு அபார்ட்மெண்ட், எண்: 50 / 52 முத்து முதலிதெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014 (தொலைபேசி எண்: 044 - 28350894, செல்பேசி எண்கள் : 90030 90686, 94441 77737) எனும் முகவரியில் உள்ள தஞ்சை. கூத்தரசனின் சென்னை இல்லத்தில் எளிமையாக நடைபெறவிருக்கிறது. கழகக் கண்மணிகள் அனைவரும் தஞ்சை.கூத்தரசன் - திருமதி.இந்துமதி இணையரை வாழ்த்திடும்படி பேரன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தொடங்கி வைத்தார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.




தாட்கோ தலைமையக அரங்கத்தில் நேற்று முன்தினம் (21.11.2023) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் நிலம் வாங்குவதற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் மானியத்துடன் குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நிர்வாக இயக்குனர் சஞ்சய் விநாயக் முதலியார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பொது மேலாளர் எம்.மோகன், தாட்கோ பொது மேலாளர் தா.பரிதா பானு ஆகியோர் கலந்து கொண்டனர்.


கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட து.செயலாளர்
வேப்பனப்பள்ளி
பி.முருகன் Ex.MLA
வி.ஜெயபிரபா BA., B.Ed.,
இல்லத் திருமண விழா
மணமக்கள்
Dr. கனிமொழி (எ) M.ஜெய்ஸ்ரீ MBBS.,
Dr. M.நவீன்குமார் MBBS., MEM.,
நாள் : 23.11.2023 வியாழக்கிழமை
காலை 10.45 – 11.45 மணி
இடம் : குமரன் மஹால்,
குந்தரப்பள்ளி ரோடு, கிருஷ்ணகிரி.
அன்பு இதயங்கள்
இணையட்டும்...
ஆயிரம் காலப்பயிர்
வளரட்டும்...
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களின் நல்வாழ்த்துகளுடன்
திருமண விழாவை
தலைமையேற்று நடத்தி வைத்து
மணமக்களை வாழ்த்த வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
துரைமுருகன்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
கே.என்.நேரு
மாண்புமிகு மாநகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
அர.சக்கரபாணி
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் / கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர்
தளி ஒய்.பிரகாஷ் MLA
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர்
அவர்களையும் வருக. வருக. என வரவேற்கிறோம்
ARASU ARTS
அழைத்து மகிழும்
பி.முருகன் Ex.MLA
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட து.செயலாளர்,
வேப்பனப்பள்ளி,
Dr. அரவிந்த் முருகன் MBBS., FIDM.,
மாவட்ட மருத்துவர் அணி து.அமைப்பாளர்,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க.



கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர்
எஸ்.கே.நவாப்
கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர்
தி.மு.க. மாநில தலைமை செயற்குழு உறுப்பினர்
B.பரிதா நவாப் B.Sc., LLB.,
இல்லத் திருமண விழா
மணமக்கள்
N.அமீர் சுஹேல் MBA.,
A.மாதுளா BA., MIB.,
நாள் : 23.11.2023 வியாழக்கிழமை காலை 10.30 மணி
இடம் : குறிஞ்சி மஹால், புதிய பேருந்து நிலையம் பின்புறம், டோல்கேட் அருகில், கிருஷ்ணகிரி.
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களின் நல்வாழ்த்துகளுடன்
திருமண விழாவை
தலைமையேற்று நடத்தி வைத்து
மணமக்களை வாழ்த்த வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
துரைமுருகன்
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
கே.என்.நேரு
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
அர.சக்கரபாணி
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர்
தே.மதியழகன் MLA
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மற்றும்
அனைவரையும் வருக. வருக..
என அன்புடன் வரவேற்கிறோம்...
ARASU ARTS
வரவேற்று மகிழும்
எஸ்.கே.நவாப்
கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர்
B.பரிதா நவாப் B.Sc., LLB.,
கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர்
தி.மு.க. மாநில தலைமை செயற்குழு உறுப்பினர்
கிருஷ்ணகிரி நகர தி.மு.க.


கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர் அவர்களின்
திருஉருவ வெண்கல சிலையை
திறந்து வைத்தும்
எங்களின்
கழக இல்ல திருமண
வரவேற்பு விழாவில்
கலந்து கொண்டும்.
23.11.2023 இன்று......
கிருஷ்ணகிரி நகர செயலாளர்
S.K.நவாப்
கழக இல்ல திருமண விழாவிற்கு
வருகைதரும்
சின்னவரே
வருக! வருக!!
மாண்புமிகு. அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர்,
கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
என்றும் தளபதியாரின் வழியில்
MK STUDIO Cell : 9500758141
இவன்
தே.மதியழகன் ,B.Sc.DFT,MLA.,
கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர்
பருகூர் சட்டமன்ற உறுப்பினர்
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்


நாள்: 23.11.2023 வியாழக்கிழமை
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் P.முருகன், Ex.MLA, கழக இல்லத் திருமண விழா
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நகரச் செயலாளர் S.K.நவாப் கழக இல்லத் திருமண விழா மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும்....
மாண்புமிகு கழக இளைஞர் அணிச் செயலாளர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களே
வருக! வருக!
மாண்புமிகு அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
அன்புடன்:
திரு. Y.பிரகாஷ் MLA.,
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க


கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர் அவர்களின் திருஉருவ வெண்கல சிலையை திறந்து வைத்தும்
கிழக்கு மாவட்ட செயலாளர்
தே.மதியழகன், MLA.,
அவர்களின்
கழக இல்ல திருமண வரவேற்பு விழாவில்
கலந்து கொண்டு அதனை தொடர்ந்து
23.11.2023 இன்று......
கிருஷ்ணகிரி நகர செயலாளர்
S.K.நவாப் மற்றும்
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளர்
பி.முருகன், Ex MLA., ஆகியோர்களின்
கழக இல்ல திருமண விழாவிற்கு
வருகைதரும்
இளம் தலைவரே!
மாண்புமிகு அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர்,
கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
திரு. தே.மதியழகன், B.Sc.DFT,MLA.,
கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர்
பருகூர் சட்டமன்ற உறுப்பினர்
வரவேற்று மகிழும் P.D.அன்பரசன், M.Sc., M.Ed.,
கழக பிரமுகர், சூர்யா குரூப்ஸ்
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்
MK STUDIO



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.11.2023) முகாம் அலுவலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, ஆகியோர் சந்தித்து, சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான அணைக்கட்டும், சுமார் 19000 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் வழங்குவதோடு, குடிநீர், மின்சார உற்பத்தி, தொழில்துறை வளர்ச்சி போன்றவற்றுக்கு முக்கிய ஆதாரமாகவும் விளங்கும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கு உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்புக்காக சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் நீர்வளத்துறை தலைமை பொறியாளர் அசோகன், சிறப்பு தலைமை பொறியாளர் கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதுப்பிக்கப்பட்ட சட்டத்துறை செயலாளருக்கான அறையை பார்வையிட்டார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு எம்.பி., சட்டத்துறை செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், காஜா முகைதீன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# தொழில் முதலீடுகளை ஈர்க்கும் கருத்தரங்கு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் – ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

நீலகிரி, நவ.23 -

நீலகிரி மாவட்டத்தில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு முன்னோடியாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழில்களில் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலான கருத்தரங்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம், உதகை ஜெம் பார்க் ஹோட்டலில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு முன்னோடியாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழில்களில் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலான கருத்தரங்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் அவர்கள் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு, எதிர்வரும் ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டு சென்னையில் நடைபெறவுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய நிலையான மற்றும் நீடித்த வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதில் இம்மாநாடு முக்கிய பங்கு வகிக்கும்.

ஒரு மனிதனுக்கு தேவையான அடிப்படை தேவையான உண்ண உணவு, உடுத்த உடை ஆகியவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உணர்வோடு நல்லாட்சி செய்து வருகிறார் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். தொழில்துறையை பொறுத்தவரை தமிழ்நாட்டில் நிலவும் தொழில்துறைக்கு உகந்த சூழல் அமைப்பு, மேம்பட்ட உள் கட்டமைப்பு, திறமை

வாய்ந்த பணியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம், வணிக ரீதியான வசதிவாய்ப்புகள் ஆகியவை தொழில்துறையில் முதலீடு செய்பவருக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகிறது. விண்வெளி, தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, ஆட்டோமொபைல், மின்சார வாகனங்கள், ஜவுளி, தரவு பகுப்பாய்வு மற்றும் மேம்பட்ட பொருட்கள் உட்பட பல்வேறு துறைகள் அரசிடமிருந்து சிறப்பு கவனம் மற்றும் ஆதரவை பெற்று முதலீட்டு வாய்ப்புகளை பெற்றிட உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முக்கிய தளமாக செயல்படும்.

மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நிகழ்வில் காட்சிப்படுத்துவதற்கும், அதன் மூலம் வாங்குபவர், விற்பனையாளர் மற்றும் இணைக்கும் பல்வேறுபங்குதாரர்களைதளமாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு2024 அமையவுள்ளது. மேலும், இம்முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களுக்கு அனைத்து விதமான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் ஆகியவற்றை அனைத்து துறைகளிடமிருந்து விரைவாக உரிய காலத்தில் பெற்றிட ஒற்றைச் சாளர தகவு வழியாக பெற்றுத் தர மாவட்ட தொழில் மையம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், ஜனவரியில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை டிரில்லியன் டாலராக உயர்த்துவதற்காகவும், சுமார் 4 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்காகவும் தமிழ்நாடு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முதலீ ட்டுக்கான இலக்காக ரூ.150 கோடி நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.117.81 கோடிக் கான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது. நாம் இலக்கை விட அதிகமாக முதலீடுகளை ஈர்க்க வாய்ப்புள்ளது. இதன் மூலம் ஏராளமான நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக வாய்ப்புகள் உள்ளது. எனவே நமது மாவட்டத்திற்கு ஏற்றவாறு பல்வேறு புதிய தொழில்கள் துவங்குவதற்கு தொழில்நிறுவனங்கள் முன்வர வேண்டும் இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், சென்னை, கோயமுத்தூர், தூத்துக்குடி மற்றும் அரபு நாடுகளில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் ஈர்ப்பு மாநாடுகளில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே கலந்து கொண்டு, அதன்மூலம் ரூ.2,72,000/ கோடி முதலீடு தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் ரூ.800 கோடி மதிப்பில் புதிய தொழில் நுட்பத்தோடு காலணிகள் ஏற்றுமதி செய்யக்கூடிய நிறுவனம், சுமார் 400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு விரைவில் உற்பத்தி தொடங்கப்படவுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 412 புதிய நிறுவனங்களுக்கு 3000 ஏக்கர் நிலம் ஒப்படைக்கப்பட்டு, அதில் ரூ.40,000 கோடி முதலீடு செய்யப்பட்டு, 1,30,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் அமையவுள்ளது. தொழில் துறை சிறப்பாக வளர்ந்து வரும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. அதேபோல நீலகிரி மாவட்டத்தையும் சிறந்த தொழில்துறையில் முன்னேறிய மாவட்டமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் சண்முகசிவா, ஆவின் பொது மேலாளர் மரு.ஜெயராமன், உதகை நகர்மன்ற தலைவர் திருமதி.வாணீஷ்வரி, துணைத் தலைவர் திரு.ரவிக்குமார், தொழில் முனைவோர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், தொழில் வர்த்தக சபை உறுப்பினர்கள், ஹோட்டல் அசோசியேஷன் உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தலைமைக் கழக பேச்சாளர்

# பவானி கண்ணன் இல்லத் திருமண வரவேற்பு!

## கழக முன்னணியினர் பங்கேற்பு!

ஈரோடு, நவ.23-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடனும், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடனும் ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் குணசேகரன் மீனாட்சி ஆகியோரது மகள் கு. கமலி, கரூர் மாவட்டம் தங்கவேல் மருதாம்பாள் ஆகியோரது மகன் த.பால சுப்பிரமணியம் ஆகியோர் திருமண விழா நாளை (24.11.2023 - வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு மேல் 10 மணிக்குள் நடைபெறுகிறது. பின்னர் ஈரோடு மாவட்டம் பவானி கூடுதுறை ஸ்ரீ ஐயப்ப சேவா மிஷன் டிரஸ்ட்டில் திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.

திருமண வரவேற்பு விழாவில் கழக முன்னணியினர், மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.



திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ரூ. 10 கோடி மதிப்பில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கான புதிய கட்டிடம் கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நாட்டும் விழா காமராஜர் சிலை அருகில் உள்ள பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் கலந்துகொண்டு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுக்கான புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினர்.

### இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதிக்கொண்டு

# மாநில மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படுகிறார் ஆளுநர்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குற்றச்சாட்டு!

**சென்னை, நவ. 23-**

**சட்டப் பேரவையில் 18-11-2023 அன்று விவாதங்களின் நடுவே குறுக்கிட்டுப் பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, "இல்லாத அதிகாரமெல்லாம் தமக்கு இருப்பதாகக் கருதிக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராக ஆளுநர் செயல்படுகிறார்" எனக் குற்றம் சாட்டினார்.**



சட்டப் பேரவையில் - சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

சட்ட மசோதாக்கள் அது நிலுவையில் இருப்பதாக அர்த்தம் அல்ல, திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது. ஆளுநர் இந்த சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பவில்லை, மாறாக, அவர் தனது ஒப்புதலை நிறுத்தி வைத்துள்ளார் என்று இன்றைக்கு பல ஊடகங்களில் சொல்வதைப்போல எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைக்கு சொல்கிறார்.

சட்டமன்றம் இதனை மீண்டும் ஒப்புதல் அளித்து அனுப்பி வைத்தாலும் அரசியலமைப்பு சட்டம் பிரிவு 200இன்படி அவர் ஒப்புதல் வழங்க கட்டுப்பட்டவர் அல்ல என்பதுதான் அது என்று, யாரோ தவறாக அப்படி கருத்துகளை திணித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு தவறான கருத்து. யாரோ ஒரு சட்ட மேதாவி அளித்த ஆலோசனையின்படி கெட்டிக்காரத்தனமாக செயல்படுவதாக நினைத்துக்கொண்டு இப்படி ஒரு குறிப்புரையை அவர் எழுதியுள்ளார் என நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின் ஓட்டைகளுக்குள் ஒளிந்து கொண்டு, இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதிக் கொண்டு, மாநில மக்களின் நலனுக்கு எதிராக செயல்படுபவருக்கு இதற்கான சட்ட பின்புலத்தை, வரலாற்றை கொஞ்சம் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

1.8.1949 அன்று நடைபெற்ற அரசியலமைப்பு சட்ட விவாதத்தின்போது பேராசிரியர் ஷிப்பன் லால் சக்ஸேனா அவர்கள் ஒரு அச்சத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசால் நியமிக்கப்படுபவர் என்பதால் ஒன்றிய அரசின் கட்சி ஆட்சியில் இல்லாத ஒரு மாநிலத்தில் அவரால், மாநில சட்டமன்ற முடிவுகளுக்கு ஒத்து போகாமல் இருக்க கூடும் என்ற அச்சத்தை அன்றைக்கு அவர் வெளிப்படுத்துகிறார்.

எனவே, சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பும் அதிகாரத்தை இரு அவைகள் உள்ள மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும் வகையில் அமைக்க வேண்டும் என்று தன் கருத்தினை அன்றைக்கு பதிவு செய்கிறார். அதற்கு பதிலளித்த அரசியலமைப்பு வரைவுக் குழு உறுப்பினர் டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், பேராசிரியர் சக்ஸேனா அவர்களின் அச்சம் அவசியமற்றது என்றும், ஆளுநர் என்பவர் தன்னிச்சையாக செயல்படவகை செய்யப்படவில்லை என்றும், அவர் எப்போதுமே அமைச்சரவையின் அறிவுரையின்படியே செயல்பட வேண்டியவர்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

எனவே, இரு அவைகள், அதாவது, முன்பு சட்டமன்ற மேலவை என்ற அமைப்பு இருந்தபோது, அதனடிப்படையில்நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவினை, அதில் மாற்றுக் கருத்து சட்டமன்றத்திற்கு இருந்தால், ஆளுநருக்கு அந்தச் சட்டமுன்வடிவினை ஏற்பது அல்லது திரும்ப அனுப்புவது குறித்த அறிவுரையை அமைச்சரவை வழங்க வழிசெய்யப்பட்டது. ஆளுநருக்கு இதில் தனிப்பட்ட எந்தவித முடிவெடுக்கும் அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதை 1.8.1949 நாளிட்ட அரசியலமைப்புச் சட்ட விவாதங்கள் பக்கம் 61ல் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

## நவம்பர் 23 (2012)



பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, 1955ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, 1956ஆம் ஆண்டு பூலாவரி கிளைக் கழகச் செயலாளராக, வட்டக் கழக பிரதிநிதியாக, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக, பின்னர் பொதுக்குழு உறுப்பினராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து 38 ஆண்டுகள் சேலம் மாவட்டக் கழகச் செயலாளராக தொய்வின்றி பணியாற்றி வந்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் – சட்டநகல் எரிப்புப் போராட்டம் ஆகியவற்றில் தலைமை ஏற்று சிறைவாசமும் – நெருக்கடிநிலை காலத்தில் 'மிசா' கைதியாக 14 மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

பூலாவரி ஊராட்சிமன்றத் தலைவர், கிராம கூட்டுறவு நாணய சங்கத் தலைவர், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், 1962 தொடங்கி ஆறு முறை சட்டப்பேரவை உறுப்பினர், சட்டமன்ற மேலவை உறுப்பினர், ஒரு முறை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், மூன்று முறை வேளாண்மைத் துறை அமைச்சர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

"சேலத்துச் சிங்கமாம், என்னுடைய தளபதி ஒருவரை இழந்த துக்கம் என்னை வாட்டி வதைக்கிறது. எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. அவ்வளவுதான் சொல்ல முடியும்!" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். மாநில மாணவரணி துணைச் செயலாளர் பி.எம்.ஆனந்த் மற்றும் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சஞ்சூர் சதீஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டிகளில் 500க்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகராட்சி மேயர் அன்பழகன் நடுவர்கள் வாசுதேவன் சுபஸ்ரீ, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அப்துல் காதர், ஒன்றிய செயலாளர்கள் சண்முகநாதன், சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழக சட்டத்துறை சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ.23-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி 6வது மண்டல பேச்சுப் போட்டி குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. அறிக்கை வருமாறு:-

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

**போட்டிகளுக்கான தலைப்புகள்**

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி - மாணவர்கள்

2. கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி - இளம் வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிட வேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் 5 மண்டலங்களில் பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தற்போது 6வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு ரூபாய் 50,000/- தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 25,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 15,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/- தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு -ரூபாய் 50,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்

கே.எஸ்.இரவிச்சந்திரன் சட்டத்துறை இணைச் செயலாளர் - 98400-22250, ஜெ.பச்சையப்பன் சட்டத் துறை துணைச் செயலாளர் - 98402-60178, கே.சந்துரு சட்டத் துறை துணைச் செயலாளர்-94440-06999.

கே.ஜே.சரவணன் தலைமைக் கழக வழக்கறிஞர் - 98410-57345

**6வது மண்டல பேச்சுப் போட்டி**

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்.

25.11.2023 - (மாணவர்கள்) காலை 9.00 மணி - இடம் அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

1. அன்னை தெரசா சட்டக்கல்லூரி, புதுக்கோட்டை (துனியார்)

3. சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

4. தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

5. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி

26.11.2023 - (வழக்கறிஞர்கள்) - காலை 9.00 மணி - திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள்.

இடம்: திருவாரூர், "கலைஞர் கோட்டம்"

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணியின்

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, நவ.23-

தி.மு.க. வழக்கறிஞர் அணி, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம் குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு வருமாறு:-

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புது க்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய அமைப்புகளுக்களுக்கான தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், வருகிற 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), காலை 10.00 மணியளவில் திருவாரூர் "கலைஞர் கோட்டத்தில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலம் ஆகிய அமைப்புகளுக்கான தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ அறிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.எ., பேசினார். உடன் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்டமன்ற முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், மகா.குமார்,ஜி.என்.ரவி, மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு


கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குடியாத்தம் குமரன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும். தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 21.11.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் இறையான்குடியில் பாண்டைவையாற்றில் உலக மீனவர் தினத்தை முன்னிட்டு 5000 மீன் குஞ்சுகளை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் விட்டார். நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (21.11.2023) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான அறிவிப்பினை (G.O) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில் வெளியிட்டார்கள். இந்நிகழ்வின்போது, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் வ. சிவகிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள், அரசு அலுவலர்கள், தொழிற்துறையினர் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (21.11.2023) நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவையை துவக்கி வைத்தார்கள். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா உட்பட பலர் உள்ளனர்.

### நமது சமுதாயமும் மக்களும் ஆரோக்கியமாக வாழ - தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழக அரசு எடுக்கும்!

# இந்தியாவில் பிற மாநிலங்களுக்கு - தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை வழிகாட்டுகிறது!

## நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி நிகழ்ச்சியில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**நாமக்கல், நவ. 23 -**

**நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 700 படுக்கை வசதியுடன் மருத்துவ சேவையை தொடங்கி வைத்துப் பேசிய, இளைஞர் நலன், விளையாட்டு, மேம்பாட்டு மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “நமது சமுதாயமும், மக்களும் ஆரோக்கியமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழக அரசு எடுக்கும்” என்றும் - “இந்தியாவில் பிற மாநிலங்களுக்கு வழி காட்டக் கூடிய ‘ரோல் மாடல்’ துறையாக தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை விளங்குகிறது” என்றும் குறிப்பிட்டார்.**

நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 700 படுக்கை வசதியுடன் மருத்துவ சேவையை தொடங்கி வைத்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 700 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி மருத்துவ சேவையைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மருத்துவ சேவையை விளையாட்டுத் துறை அமைச்சராக இருக்கிற என்னை அழைத்து எதற்காக நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தொடங்கி வைக்கச் சொல்கிறார் என்று யோசித்துப் பார்த்தேன்.

எல்லோரும் தினந்தோறும் நன்றாக விளையாடினால் தான், உடற்பயிற்சி செய்தால் தான் எதிர்காலத்தில் அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு வாழ முடியும். அதன் மூலம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான பணிச்சுமையைக் குறைக்க முடியும் என்பதை உணர்த்தத்தான் நமது அண்ணன் மா.சு. அவர்கள் என்னை அழைத்து இந்த மருத்துவச் சேவையை தொடங்கி வைக்கச் சொல்லியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

### கல்விக்கு முக்கியத்துவம் தரும் மாவட்டம்!

இந்த நாமக்கல் மாவட்டம் பொதுவாக கல்விக்கு அதிக முக்கியத்துவம் தருகிற மாவட்டம். தமிழ்நாட்டில் இப்போதிருக்கும் பல மருத்துவர்களை உருவாக்கியது இந்த நாமக்கல் மாவட்டத்தில் இயங்குகிற பள்ளிகள்தான்.

நீட் தேர்வு இல்லாமல் இருந்தால், இன்னும் அதிகமான ஏழை - எளிய அரசுப்பள்ளி மாணவர்களால், மருத்துவக் கல்வி பெற முடியும். அதை நோக்கிதான் நம் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்ட பள்ளிகளில் படித்த மாணவர்கள் தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் சேர்ந்து படிக்கின்றனர். ஆனால், இந்த மாவட்டத்துக்கென்று ஒரு அரசு மருத்துவக் கல்லூரி இல்லாமல் இருந்தது. இன்றைக்கு நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ சேவைகள் தொடங்கப்படுவதன் மூலம் அந்தக் குறை நீக்கப்படுகிறது என்பதில் நான் பெருமை அடைகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் மக்கள் நல்வாழ்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிறது. இது தி.மு.க. முதன்முதலில் ஆட்சிக்கு வந்த 1967ஆம் ஆண்டு தொடங்கி இப்போது வரை தொடர்கிறது.

### கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனை!

இப்போது கூட கலைஞர் நூற்றாண்டினைக் கொண்டாடி வருகிறோம். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையினை ரூ.250 கோடியில் சென்னை கிண்டியில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ஒரு சமூகத்தில் வாழுகிற மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தால் தான் அந்தச் சமூகம் கல்வியிலும் பொருளாதாரத்திலும் அறிவாற்றலிலும் சிறந்து விளங்க முடியும் என்பதை குறிப்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால்தான் 2006 ஆம் ஆண்டிலேயே மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக்கல்லூரி வேண்டும் என்று கலைஞர் அவர்கள் கனவு கண்டார்கள். அதன் விளைவாக, இன்று தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் நவீன வசதிகள், கூடுதல் படுக்கை வசதி கொண்ட கட்டடங்கள் தி.மு.க. அரசால் ஏற்படுத்தப்பட்டன.

வெறும் நவீன வசதிகளை ஏற்படுத்தியதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான பணியிடங்களை உருவாக்கி தி.மு.க. அரசுதான் மருத்துவர்களையும், செவிலியர்களையும் பணியில் அமர்த்தியது.

இன்றைக்கு கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு தான் இந்த அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து கூடுதல் நிதியை ஒதுக்கித் தந்து கொண்டிருக்கிறது.

நகரப் பகுதிகளில் வாழுகிற மக்களுக்கு இருக்கிற மருத்துவ வசதிகள் கிராமப்புறங்களில் வாழுகிற மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அடுத்து, மருத்துவச் சேவையைத் தேடி மக்கள் வருவதைக் காட்டிலும் மக்களைத் தேடி மருத்துவச் சேவைகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதில் தி.மு.க. அரசு உறுதியாக இருக்கிறது. அதன் அடிப்படையில் தான், மக்களைத் தேடி மருத்துவம் என்கிற மகத்தான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் பல நகரப் பகுதிகளில் இருக்கிற அரசு மருத்துவமனைகளை மட்டுமல்ல, கிராமப் பகுதிகளில் இன்றைக்கு இருக்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் பலவற்றை தி.மு.க. அரசு தான் ஏற்படுத்தியது.

இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு, பொறுப்பேற்ற பிறகு, இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில் 8 துணை சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், 4 கோடியே 95 லட்சம் கோடி ரூபாய் செலவில் 11 ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான கட்டடங்கள் இந்த மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 80 லட்சம் ரூபாய் செலவில் கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

அதோடு மட்டுமல்ல, 1 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் குமாரபாளையம் மற்றும் கொல்லிமலை அரசு மருத்துவமனைகளில் ஆய்வகத்துடன் கூடிய புற நோயாளிகள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த வங்கி போன்ற மருத்துவ சேவைகள் துவக்கி வைக்கப்பட்டு மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இப்போது, 2023 2024ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையில் நமது நாமக்கல் மாவட்ட மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக 42 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 29 அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

### தொய்வில்லாமல் பணிகள்!

எனவே, தி.மு.க. அரசைப் பொறுத்தவரை சமுதாயத்தைப் பாதிக்கிற நோய்களுக்கும், அதேபோல் மக்களை பாதிக்கிற நோய்களுக்கும் தேவையான சிகிச்சைகளை அளித்து குணப்படுத்த வேண்டிய இரண்டு பணிகளிலும் எந்த தொய்வும் இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சமுதாயத்தை பாதிக்கிற நோய்களைத் தீர்ப்பதற்காக நூலகங்களையும் மக்களைப் பாதிக்கிற நோய்களை தீர்ப்பதற்காக மருத்துவ வசதிகளையும் இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது.

இப்போது நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிற நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் இதற்கு நமக்கு வழிகாட்டிச் சென்றிருக்கிறார்.

நமது சமுதாயம் ஆரோக்கியமாக வாழவும், மக்கள் ஆரோக்கியமாக வாழவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியினை உங்களுக்கு அளிக்கிறேன்.

சமீபத்தில், தமிழ்நாட்டில் இருக்கிற சுகாதார வசதிகளைப் பார்த்து குஜராத்தில் இருந்து வந்த மருத்துவக் குழுவினர் ஆச்சரியத்தோடு பாராட்டிய செய்திகளை எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது தான் திராவிட மாடல்.

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரை இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு வழிகாட்டக் கூட்டிய ரோல் மாடல் துறையாக விளங்கி வருகிறது,

அது மேலும் மேலும் தொடர மருத்துவர்களும் செவிலியர்களும் மற்ற துறை பணியாளர்களும் பணியாற்றிட வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

---

### அமைச்சர்கள் சு.முத்துசாமி - சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! ரூ.40 கோடியில் - ஈரோடு மாவட்டம் -

# பெருந்துறை ‘சிப்காட்’ தொழிற்பேட்டை வளாகத்தில் சுத்திகரிப்பு நிலையம்!

## இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாடு - சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*ஈரோடு, நவ. 23 -*

*ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான அறிவிப்பினை (G.O) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (21.11.2023) வெளியிட்டார்.*

*இந்நிகழ்வின்போது, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது :*

*முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கின்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நேற்று முன் தினம் (21.11.2023) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் புதிய பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஆணை (G.O.(Ms) No.218 Date 20.11.2023) வெளியிடப்பட்டுள்ளது. இந்த பொது சுத்திகரிப்பு நிலையம் தினசரி 20.00 இலட்சம் லிட்டர் கழிவு நீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்யும் வகையில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது.*

*மேலும், மொத்த மதிப்பான ரூ.40.00 கோடியில் அரசின் பங்காக ரூ.20.00 கோடியும் மற்றும் சிப்காட் தொழிற்சாலை உரிமையாளர்கள் சார்பாக ரூ.20.00 கோடியும் வழங்குவதற்கும் ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளனர். மேலும், தொழிற்சாலைகள் கழிவுநீரை நேரடியாக சுத்திகரிப்பு நிலையத்திற்கு மட்டுமே கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். அதே போல், கழிவு நீரை நிலத்தில் கண்டிப்பாக விடக்கூடாது. மேலும், காற்று மாசு அடைகின்றவகையில் புகையோ, கழிவோ வெளியேறாமல் தொழிற்சாலைகள் பாரத்துக்கொள்ள வேண்டுமெனவும் சிப்காட் வளாகத்தில் தேங்கியிருக்கும் சுமார் 63,000 டன் கழிவுகளை இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு விரைவில் எடுத்து செல்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*பொதுமக்களின் நலனுக்காக சிப்காட் வளாகத்தில் உள்ள நல்லான் ஓடை தூர்வாரி சுத்தப்படுத்தி மழை நீர் ஓடுகின்ற வகையில் பாதுகாக்கப்படும். மேலும், சிப்காட் வளாகத்தில் ஏற்கனவே மாசுபட்ட நிலத்தடி நீரை உறிஞ்சி சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

*ஏற்கனவே உள்ள திறந்த வெளி கிணறுகள், ஆழ்துளை கிணறு மூலம் நிலத்தடி நீர் எடுத்து சுத்தப் படுத்தப்படும். தேவையான இடத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து மாசுபட்ட தண்ணீரை எடுத்து சுத்தப்படுத்தப்படும். அவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு வரும் தண்ணீர் மீண்டும் தொழிற்சாலைகளுக்கு கொடுக்கப்படும். மேலும், விவாசய நிலங்களும், நீர்நிலைகளும் பாதிக்கப்படாமல் விவசாயத்தினைப் பாதுகாப்பது நமது அனைவரின் கடமையாகும்.*

*அரசின் விதிமுறைகளை தொழிற்சாலைகள் முழுமையாகப் பின்பற்றிட வேண்டும் மற்றும் மக்களின் நலனுக்காக அரசு அளிக்கின்ற பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் நல்லமுறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களின் நலனில் மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கு தங்களின் அன்பையும், ஆதரவையும் வழங்க வேண்டும்.*

*இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.*

*இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வி. மெய்யநாதன், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். ப.செல்வராஜ்,*

*நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் வ.சிவ கிருஷ்ண மூர்த்தி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள், அரசு அலுவலர்கள், தொழிற்துறையினர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.*

---

### கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப் - பரிதா நவாப் இல்ல மணவிழா!

## கழக முன்னணியினர் வாழ்த்து!

*கிருஷ்ணகிரி, நவ. 23 -*

*கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் கிருஷ்ணகிரி நகராட்சி தலைவருமான பரிதா நவாப்பின் மகன் அமீர் சுஹேல் மணமகள் மாதுளா ஆகியோரது திருமண விழா இன்று (23.11.2023 - வியாழக்கிழமை) காலை 9 மணி அளவில் கிருஷ்ணகிரி குறிஞ்சி மஹாலில் கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.*



*இந்த திருமண நிகழ்ச்சிக்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அவர்கள் முன்னிலை வகிக்கின்றார்.*

*கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளார்கள்.*

*தமிழக அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் கிருஷ்ணகிரி மேற்கு, கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.*



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், பரஞ்சேர்வழி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் கலைஞர் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இலவச சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.ஜெகதீஸ்குமார், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ், காங்கேயம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் மகேஸ்குமார் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.


சேலத்து சிங்கம்
வீரபாண்டியார்
அவர்களின்
11ஆம் ஆண்டு
நினைவஞ்சலி
23
நவம்பர்
நீங்கள் வகுத்துத்தந்த கழகப்பாதையில்
கழகத்தலைவர் வழிநடந்து
பாதைமாறா பயணம் தொடர்வோம்..
நீங்கா நினைவுகளுடன்
எஸ்.ஆர்.சிவலிங்கம் Ex.MLA
மாவட்ட கழகச் செயலாளர்
வீரபாண்டி Dr.ஆ.பிரபு M.B.B.S.,
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
செயலாளர் - V.S.A.கல்வி நிறுவனங்கள்
P.சித்தார்த்தா ஆறுமுகம் P.ஆதவன் ஆறுமுகம்
சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி
JAGAN ADS - 9962969675






சேலத்தில் டிசம்பர் 17 அன்று நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணியின் 2–ஆவது மாநில மாநாட்டை வெற்றி பெறச் செய்திட நடைபெற்ற ஈரோடு வடக்கு தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணிச் செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டார். "பெரியார் மண் என்று தமிழ்நாட்டைச் சொல்கிறோம் என்றால் அதற்கு அடித்தளமிட்டது ஈரோட்டு மண். அத்தகைய ஈரோட்டு மண்ணிலிருந்து சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கு சாரை சாரையாக வர வேண்டும்" என்று இளைஞர் அணி நிர்வாகிகள் – உறுப்பினர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். கழக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி, வடக்கு மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ் உள்ளிட்ட முன்னணியினர் மேடையில் உள்ளார்கள்.

## நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# மருத்துவ சேவையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

## ரூ.16.52 கோடியில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

நாமக்கல், நவ. 23 -

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவ சேவையை துவக்கி வைத்து, 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (21.11.2023) மருத்துவ சேவையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைப்பதன் அடையாளமாக 5 நபர்களுக்கு புறநோயாளி உள் நுழைவுச் சீட்டினை வழங்கினார். மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தலைமையில், 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் வழங்கினார்கள்.

**அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, நாமக்கல் திட்ட அறிக்கை :**

மருத்துவமனை கட்டடங்கள் ரூபாய் 159.452 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 4,52,488 சதுர அடி பரப்பளவில், 700 படுக்கை வசதிகளுடன் கூடிய தரைத்தளத்துடன் 6 தளங்கள் கொண்ட கட்டடமாக கட்டப்பட்டுள்ளது.

**கட்டடங்களின் முக்கிய அம்சங்கள் மருத்துவமனை கட்டடம் :**

**தரை தளம்:** மருத்துவ உபகரணக்கிடங்கு மருந்து கிடங்கு, டயாலசிஸ், சிஎஸ்எஸ்டி, மத்திய ஆய்வகம், மருத்துவ பதிவேடு துறை, கதிரியக்கவியல் (சிடி & எம்.ஆரஐ), பிஎம்ஆர் புறநோயாளிகள் பிரிவு மற்றும் மாவட்ட தொடக்கநிலை இடையீட்டுசேவைகள்மையம்

**முதல் தளம்:** முடநீக்கியல் சிகிச்சை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை. கண் மருத்துவம் புறநோயாளி கள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் அவசர சிகிச்சை அறுவை அரங்கம்.

**இரண்டாம் தளம்:** குழந்தைகள், தோல் மருத்துவம், மனநலம், காச நோய், நெஞ்சக மருத்துவம், பல், காது, மூக்கு, தொண்டை, மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவ புறநோயாளிகள் சிகிச்சை பிரிவுகள், மகப்பேறு அறுவை அரங்கம், இரத்த வங்கி மற்றும் பச்சிளங்குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு.

**மூன்றாம் தளம்:** 132 படுக்கைகள் பொது மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு, 20 படுக்கைகள் நெஞ்சக நோய் உள்நோயாளிகள் பிரிவு, 20 படுக்கை மனநல மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு, 10 படுக்கைகள் தோல் சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு, அதி தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் தீவிர இருதய சிகிச்சை பிரிவு.

**நான்காம் தளம்:** 24 படுக்கைகள் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை உள் நோயாளிகள் பிரிவு,

105 படுக்கைகள் மகளிர் நல, பேறுகால மற்றும் மகப்பேறு உள்நோயாளிகள் பிரிவு மற்றும் 75 படுக்கைகள் குழந்தைகள் நல சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு

**ஐந்தாம் தளம்:** 120 படுக்கைகள் பொது அறுவை சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு, 75 படுக்கைகள் முடநீக்கியல் மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு மற்றும் 30 படுக்கைகள் கண் மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு.

**ஆறாம் தளம்:** 9 அறுவை அரங்கங்கள், மயக்கவியல் துறை, அறுவை சிகிச்சை தீவிர சிகிச்சை பிரிவு, பிந்தைய மயக்க மருந்து தீவிர சிகிச்சை பிரிவு, 30 படுக்கைகள் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு உள்நோயாளிகள் பிரிவு மற்றும் 20 படுக்கைகள் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பரிவு,

சமையல் கூடம், நிலைய மருத்துவ அலுவலர் 4 குடியிருப்புகள், ஆண்கள் மற்றும் பெண்கள் பயிற்சி மருத்துவர்களுக்கான குடியிருப்பு, செவிலியா விடுதி, சலவையகம். உயிர் மருத்துவ கழிவுகள் கட்டடம். பன்மடங்கு அறை, கட்டண கழிப்பறை, சவக்கிடங்கு மற்றும் காத்திருப்பு அறை போன்ற மருத்துவமனை சார்ந்த கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளது.

**நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நாள் ஒன்றுக்கு 14 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் பணி (திட்ட மதிப்பீடு ரூபாய் 6.37 கோடி) :**

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் 4 பேரூராட்சிகள் மற்றும் 1081 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் முசிறி நீர் உந்து நிலையத்தில் இருந்து 12.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. முசிறி நீர் உந்து நிலையத்தில் அமைந்துள்ள 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் இருந்து புதிய குழாய் 200mm விட்டம் கொண்ட DI K7 குழாய்கள் 12.5 கி.மீ. நீளம் மற்றும் 1167 LPM X 80 M Head திறன் கொண்ட மின் மோட்டார்கள் 2 எண்ணிக்கை பொருத்தி குடிநீர் வழங்குவதற்கு ரூ.6.37 கோடி திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து முசிறியில் அமைந்துள்ள 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் இருந்து 12.5 கி.மீ நீளத்திற்கு 200 மி.மீ விட்டம் கொண்ட DI K7 குழாய்கள் பதிக்கப்பட்டு, முசிறி நீர் உந்து நிலையத்தில் 1167 LPM X 80 M Head திறன் கொண்ட மின்மோட்டார்கள் 2 எண்ணிக்கை பொருத்தப்பட்டு நாள் தோறும் நாமக்கல் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு 14 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் 05.11.2023 அன்று பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நிறைவு பெற்று திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விபரம் :**

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.16.51கோடி மதிப்பில் 186 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 2450 உறுப்பினர்களுக்கு வங்கி பெருங்கடன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,07,000/ இலட்சம் மதிப்பில் பேட்டரியில் இயங்கும் சக்கர நாற்காலி, 2 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட பற்று அட்டைகள், 2 திருநங்கைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வாழ்த்து மடல், சுகாதார துறையின் சார்பில் ரூ.4,000/ மதிப்பில் 2 கர்ப்பணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப்பெட்டகம், 2 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு அட்டைகள், நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி கல்லூரி விளையாட்டு விழா 2023 போட்டியில் வெற்றி பெற்ற 1 நபருக்கு கோப்பை, ஏழை மாணவ, மாணவிகளுக்கு உதவும் "விருட்சம்" அமைப்பின் மூலம் 3 மாணவ, மாணவிகளுக்கு ரூ.18,400/ மதிப்பில் உதவித் தொகை என மொத்தம் 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தொடர்ந்து, கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி.யின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.92.30 இலட்சம் மதிப்பில் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு உபகரணங்கள் பெறுவதற்காக காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம். மதுரா செந்தில், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் ஜெ.சங்குமணி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ரெ.சுமன், நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் கே.சாந்தா அருள்மொழி, நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி மா.பிரியா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **இலவச எரிவாயு அடுப்பு.**

# 45 இடம் பொருள் கலைஞர்






இந்தத் திட்டத்தின் கீழ் 2007 முதல் 2010 வரை ரூ.661 கோடி செலவில் எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள், சுமார் 29 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

# இலவச எரிவாயு அடுப்பு

## புகையிலிருந்து பெண்களுக்கு விடுதலை அளித்த வாக்குறுதி!

2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அடைந்த வெற்றிக்குக் காரணம், மக்கள் நலத் திட்டங்களை முன்னிறுத்திய அதன் தேர்தல் அறிக்கைதான் என்று சொன்னால், அது மிகையில்லை. அதிலும், **இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, சத்துணவில் வாரம் இரண்டு முறை முட்டை உள்ளிட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளை மையப்படுத்திய வாக்குறுதிகள், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்தியவை என்பதை யாராலும் மறுக்க முடியாது.**

அந்த வாக்குறுதிகளின் வரிசையில் ஒன்றுதான், இலவச எரிவாயு அடுப்பு. "விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தும் ஏழை எளியவர்களின் இல்லங்களில் சமையல் செய்யும் போது பெண்கள் படும் இன்னல்களைக் களையும் வகையில், அந்தக் குடும்பங்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பும், எரிவாயு அடுப்பும் கிடைத்திட வழிவகை செய்யப்படும்" என்று கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தது.

அந்தத் தேர்தலில் கழகம் வெற்றிபெற்று மே மாதம் ஆட்சியில் அமர்ந்தது. அடுத்து வந்த சுதந்திர நாள் அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் தம் உரையில், "இத்திட்டம் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில், வரும் பொங்கல் திருநாளன்று தொடங்கி, தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், இந்தக் குடும்பங்களுக்குத் தரப்படும் இலவச சமையல் எரிவாயு இணைப் பிற்கான வைப்புத் தொகை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வதுடன், எரிவாயு அடுப்பையும் இலவசமாக வழங்கும்" என்று அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பெற இருப்போரைத் தேர்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய குழுக்களையே இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தில் பயன்பெறுவோரைத் தேர்வு செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டார்.

### அடுக்களையில் நிறைவேறும் ஆசைகள்!

கலைஞர் அறிவித்தபடியே, 2007- ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் தேதி, இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் சென்னையில் தொடங்கப்பட்டது. அதில் அன்றைய ஒன்றிய பெட்ரோலியத் துறை அமைச்சர் முரளி தியோரா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அப்போது கலைஞர் ஆற்றிய உரை, திட்டத்தைத் தொடங்கி வைத்த உரையாக மட்டுமல்லாமல், கூட்டாட்சி பற்றி ஒன்றிய அரசுக்கு அவர் எடுத்த பாடமாகவும் அமைந்தது.

"நேற்றைக்குக் கூட நான் என்னுடைய சொந்த ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கே புதிய ரயில் பாதை ஒன்று தொடங்கப்பட்ட நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியிலே பேசும்போது கூடச் சொன்னேன். 'மத்திய அரசும், மாநில அரசும் இந்த ரயில் பாதையிலே இருக்கின்ற இரண்டு தண்டவாளங்களைப் போல இருந்தால், ரயில் ஒழுங்காகச் செல்லும். அப்படித்தான் இந்த நாட்டை, இரண்டு தண்டவாளங்களாக இருந்து நடத்துவோம், நன்மைகளைக் குவிப்போம்' என்று சொன்னேன்.

அதைப் போல, மாநில அரசின் கோரிக்கைகளுக்கு, செவிசாய்க்க வேண்டும். நாங்கள் கேட்டுக்கொண்டேதான் இருப்போம். ஊத ஊதத்தான் நெருப்பு பற்றும். ஏனென்றால், இது அடுப்பு வழங்குகின்ற விழாவாக இருப்பதால், நான் சொல்கிறேன். ஆனால், ஊதாமலே நெருப்பு பற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அடுப்பைத் தருகிறோம்.

இதை நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு, அடுப்பின் தேவை எங்களுக்கு இருக்கின்றது. நெருப்பின் தேவையும் எங்களுக்கு இருக்கின்றது. சமையலின் அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது. அதெல்லாம் நடைபெற வேண்டுமேயானால், அவர்கள் ஊதி கஷ்டப்படாமலே, அப்படி ஊதுகின்ற காரணத்தால் உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளாமலே எப்படி ஒரு பெண்மணியினுடைய ஆசைகள், அடுக்களையிலே நிறைவேற வேண்டுமோ, அதைப்போல எங்களுடைய ஆவலும் நிறைவேறுவதற்கு மத்தியிலே இருக்கின்ற அரசு ஆவன செய்ய வேண்டும்" என்றார் கலைஞர்.

### கொடை அல்ல... சீதனம்!

'மாநில அரசு கேட்கும்போதெல்லாம், பணமாகக் கொடுக்காவிட்டாலும், திட்டங்களாகக் கொடுக்க வேண்டும்' என்று தனது உரையில் கோரிக்கை வைத்த கலைஞர், தி.மு.க. ஆட்சி, பெண்களின் உரிமையில் எந்த அளவுக்கு அக்கறை கொண்ட ஆட்சி என்பதைப் பற்றி இப்படிச் சொன்னார்:

"இன்றைக்குத் தரப்படுவது ஒரு அடுப்பு. இதை நான் ஒரு பெரிய வள்ளல் தன்மையாகக் கருதவில்லை. ஆனால், இதைப் பெறுகின்ற ஏழை எளிய தாய்மார்களுக்கு இது பெரும் சீதனமாகத்தான் இருக்கும். அது மாத்திரமல்ல. இதற்கான முன்தொகை, டெபாசிட், அதைக் கூட அரசுதான் தருகிறது.

**இந்த அடுப்பைப் பயன்படுத்து கின்றவர்களை நான் ஒன்று மட்டும் வேண்டிக் கேட்டுக் கொள்வேன். மிக எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக இதைப் பயன்படுத்த வேண்டும். எப்படியும் பயன்படுத்தலாம் என்று பயன்படுத்தக் கூடாது.**

இந்த அடுப்பைப் பயன்படுத்துகின்றவர்களை நான் ஒன்று மட்டும் வேண்டிக் கேட்டுக் கொள்வேன். மிக எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக இதைப் பயன்படுத்த வேண்டும். எப்படியும் பயன்படுத்தலாம் என்று பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால், நம்முடைய தமிழகத்தில் எல்லா வீடுகளும் மாடி வீடுகள் அல்ல. மண் குடிசைகளும் உண்டு. ஓலைக் குடிசைகளும் உண்டு. அப்படிப்பட்ட ஓலை வேய்ந்த வீடுகளில், இந்த அடுப்புகள் அமைக்கப்படும்போது, ஓலைக் கூரைக்கும், அடுப்பு எரிகின்ற இடத்துக்கும் மிக அதிகமான இடைவெளி இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தீ தாவக் கூடும்.

ஒரு பொறி பறந்தால், அதன் காரணமாக என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு இடம் தராமல் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பொறி பறந்தால், அந்த இல்லம் மாத்திரம் நாசமாகிவிடாது. அதைக் கேள்விப்பட்டால் என்னுடைய உள்ளமும் ரத்தக் கண்ணீர் வடிக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று ஒரு தந்தையின் நிலையில் இருந்து இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

இன்றைக்கு தேர்தல் காலத்துக்காகச் சிலிண்டர்களின் விலையைக் குறைத்து, 'ரெவ்டி கல்ச்சர்' பற்றிப் பேசும் 'ரவுடி' கட்சிகளுக்குத் தெரியுமா கலைஞர் கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்களின் ஹிஸ்டரி...? அந்தக் கட்சிகள் எல்லாம் அதை அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால்... எரிவாயு என்பது எரித்துவிடும் பொருள்..!

**...வலம் வருவோம்**

## பித்துப்பிடித்து நிற்கும் விளம்பர மோகிகள்!

உலகக் கோப்பை கிரிக்கெட் ஆட்டத்தைத் தேர்தலுக்கான துருப்புச் சீட்டாக ஒன்றிய அரசு பயன்படுத்த நினைத்தது வெட்கக்கேடான விஷயம். பத்தாண்டு காலம் ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சி, தனது ஆட்சிக் காலத்தில் பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி அறிமுகம், காஷ்மீர் சிறப்புச் சட்டம் நீக்கம், ராணுவ வீரர்களுக்குக் கான்ட்ராக்ட் முறையில் வேலை வாய்ப்பு எனப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர். அவர்களது ஆட்சியின் பெருமை என எதையுமே சுட்டிக்காட்ட முடியாத நிலையில், கிரிக்கெட் இறுதியாட்டத்திற்கு ராணுவ விமானப் படையை அழைத்து வந்து வேடிக்கை காட்டியதெல்லாம் மிக மோசமான முன்னுதாரணம். ராணுவத்திற்கான மாண்பைச் சிதைக்கும் செயல்.

ஏற்கனவே கொரோனாவை ஒழிப்பதில் சொதப்பிவிட்டு, மருத்துவமனைகளின்மீது ஹெலிகாப்டர் மூலம் பூக்களைக் கொட்டி வேடிக்கை காட்டியவர்கள்தானே இவர்கள்! இவர்கள் ஆட்சியின் சாதனை என்று எதையாவது சுட்டிக்காட்டுவதைவிட, சொதப்பல் எனச் சுட்டிக்காட்டத்தான் பலவும் இருக்கின்றன!

உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணியின் தோல்வியால், மோடியின் இந்துத்வா கும்பலின் அரசியல் விளம்பரத்துக்கு மிகப்பெரிய அடி விழுந்து விட்டது. உலகக் கோப்பையை வைத்து கோவில் கோவிலாகப் பூஜை போட்டிருக்கலாம், இந்தியா முழுக்க ஊர்வலம் நடத்தியிருக்கலாம், நான் டீ விற்கும் காலத்திலேயே பொழுது போக்காகத் தெருவோரமாக கிரிக்கெட் ஆடியவன் என்று கப்சா விட்டிருக்கலாம், ராமன் பார்வை பட்டதால்தான் கோப்பை நமக்குக் கிடைத்ததென்று ஆன்மிகக் கதை பேசியிருக்கலாம். இப்போது அனைத்துமே கைநழுவியதால், பித்துப்பிடித்தது போல் இருக்கிறார்கள்.

நம் இந்தியாவின் நிறம் காவியாக..., மத வன்முறையாக மாற்றப்படுவதால், சர்வதேச அரங்கில் நமக்கென இருக்கும் நற்பெயர் சீர்கெட்டு வருகிறது. நம் குணம் இதுவல்ல, நமது இந்தியா இதுவல்ல... மீட்டெடுப்போம் நம் பெருமையை! நமது இந்தியாவை!

**-பத்திரிகையாளர் வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் முகநூல் பதிவு**

## :.ப்ளாஷ்பேக்



### ரயில் நிலைய நினைவு!



கோட்டை அப்பாஸ்

1989-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் வெற்றிபெற்று மூன்றாவது முறையாக முதல் அமைச்சர் பொறுப்பேற்றிருந்தார். முதல் அமைச்சரானவுடன் தொண்டர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கும் வகையில், ரயிலில் கோயம்புத்தூருக்கு வருகை தந்தார். அன்றைய ஒருங்கிணைந்த கோவை மாவட்டச் செயலாளர் மு.கண்ணப்பன் தலைமையில், தலைவர் கலைஞரை சந்திக்க 14 வயது சிறுவனாக ரயில் நிலையம் சென்ற நினைவுகளை, இன்றைக்கும் எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

**-கோட்டை அப்பாஸ், துணைச் செயலாளர், கோவை மாநகர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங் கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### குடியிருப்பு மனைச் சட்டம்!

**1971-ஆம் ஆண்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக குடியிருப்பு மனைச் சட்டத்தைக் கொண்டு வந்தார் கலைஞர். மிராசுதாரர்களின் நிலங்களில் வீடு கட்டிக் குடியிருந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த மனை சொந்தமாக்கப்பட்டது. அந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பின், அப்போது, ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேர் பயனடைந்தனர். அதில் தாழ்த்தப்பட்ட சமூக ஏழை விவசாயத் தொழிலாளர்கள் ஒரு லட்சம் பேர் பயன்பெற்றனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 308




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131